நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 1
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
சனவரி - 2019

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ்மணம்** 4

2. **சிலம்புப்புதையல் - போற்றா ஒழுக்கம்** 7
   - முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

3. **மரு** 9
   - பேரா **செ.வை.சண்முகம்**

4. **பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு** 34
   - பேராசிரியர் **ப.மருதநாயகம்**
   சென்ற இதழின் தொடர்ச்சி

5. **சங்கச் செய்திகள்** 42

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

"போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்னும் கண்ணகியின் கூற்று அவளுடைய வாயல்முறுவல் கண்டு உள்ளகம் வருந்திய மாமன் மாமியாருடைய அவலநிலை மேலீட்டால் சொன்ன சொற்கள். ஒருகாலத்தில் பட்டிமன்ற மேடைகளில் இலக்கியத்திறனாய்வு மிக்க அறிஞர்கள் ஒருவருக்கொருவர் சாடிய சாடல் வரிகளில் இதுவும் ஒன்று. அக்காலங்களில் பட்டிமன்றங்கள் இலக்கிய மேடைகளாக விளங்கின. இப்போது பட்டிமன்றங்கள் பொழுதுபோக்கு மேடைகளாக மாற்றம் பெற்று வணிக மையங்களின் பணபலத்தோடு தொலைக்காட்சியின் விளம்பரப் பொருளாகிவிட்டன. விளம்பர உத்திகளைப் பயன்படுத்தும் அரசியல், சமய நிறுவனங்கள் நாடகக் கலைஞர்களைப் பயன்படுத்துவதைவிட பட்டிமன்றங்கள் எடுப்பாகப் பொதுமக்களைக் கவர்ந்து இழுக்கின்றன என்பதால் பட்டிமன்றங்களையே வரவேற்கின்றன.

"போற்றுதல் என்பது புணர்ந்தோரைப் பிரியாமை" என்ற கலித்தொகை மேற்கோள் சான்றாக அமைந்து போற்றுதல் என்பது எழுதாக் கிளவியாக திருமண உடன்பாட்டை இறுதிவரைப் பாதுகாத்தல் என்னும் நியதியாகும். இற்றை நாளில் திருமணமுறிவு வழக்குகள் நீதிமன்றங்களில் பெருகி வரும் நிலையில் சங்க இலக்கிய வாழ்க்கை நெறி ஓம்பல் இன்றியமையா முதன்மைச் செய்தி எனல் சாலும். பேராசிரியர் இரா.இளங்குமரனார் கட்டுரை செவ்விலக்கியநோக்கு மறாமையும் சொற்களின் ஆளுமை குறித்த விளக்கமாகவும் அமைந்துள்ளமை எண்ணுதற்குரியதாகும்.

"மரு" என்னும் தலைப்பில் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் எழுதிய கட்டுரை இடம்பெறுகிறது. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரத்துள்ளும் மரு குறித்த செய்திகளை மாணவர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். இக்கட்டுரையின் பரப்பும் ஆழமும் நுட்பமும் நவில்தொறும் இன்பம் பயப்பதாக அமையும். பேராசிரியர் செ.வை.சண்முகம் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற சங்க இலக்கியங்களை எழுத்தெண்ணிக்கற்றவர். மரபு வழி இலக்கணக்கல்வியோடு மொழி இலக்கணவரலாறு மொழியியல் பரப்பு

முழுவதும் அறிந்த சான்றோர். அவருடைய கல்விப் புலத்தைவிட அவருடைய தொல்காப்பியக்காதல் என்பது அளந்து அறியமுடியாத வானினும் உயர்ந்தது. கட்டுரையைப் படியுங்கள். தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் போன்ற அறிஞர் பெருமக்களின் சொற்களை எண்ணிப்பார்த்து ஒப்பிட்டு அவர்கள் மாறுபடும் இடங்களைச் சுட்டுவது கற்பவர்களுக்கு வியப்பளிக்கும். தொல்காப்பியத்துள்ளும் உரையாசிரியர்களுக்குள்ளும் சொற்களிலும் சொற்றொடர்களிலும் மறைந்துள்ள ரகசியச் செய்திகளை வெளிக்கொணர்கின்ற கட்டுரை ஆசிரியரின் புலமை கற்பவரை வியப்பில் ஆழ்த்தும். மாணவர்கள் பாதுகாத்துப் பலமுறை படிக்க வேண்டிய கட்டுரை.

பேராசிரியர் ப.மருதநாயகம் தொடர்ந்து "பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு" என்னும் தலைப்பில் மேலைநாடுகளில் குறிப்பாக நாகரிகம்மிக்க பிரான்சுநாட்டில் திருக்குறளின் தாக்கம் பற்றி விரிவாக எழுதி வருகிறார். பிரான்சுவா குரோ என்னும் சிந்தனையாளர் "ஆழ்ஆறு" என்னும் நூலில், உள்ளார்ந்த ஆழ்ந்த காதல் உணர்வுகளை திருக்குறள் காமத்துப்பால் தலைப்புக்களையும் கருத்துக்களையும் அவர் எடுத்தாண்டுள்ள மாட்சியை சென்ற இதழில் பேராசிரியர் ப.மருதநாயகம் விளக்கி, திருக்குறள் உலகம் தழுவிய மானிடம் முழுமைக்கும் சொந்தம் என்பதை எடுத்துரைத்த சிறப்பை கற்று இன்புற்றோம். இந்த இதழில் பிரான்சு நாட்டு அறிஞர் சுதாந்தல் காதல் குறித்து எழுதும் "காதல்" என்னும் நூலுள் திருக்குறள் தலைப்பு அமைவுடன் நூல் எழுதியிருப்பதையும் திருவள்ளுவர் காதல் மனவுணர்வுசார்ந்த வளர்ந்த நாகரிகத்தின் வெளிப்பாடாக அமைந்திருப்பதை எடுத்துரைக்கிறார். நாகரிகம் இல்லாத கீழ்மக்கள் உடலுறவையே விரும்பி கொலைபாதகச் செயலில் ஈடுபட்டுத் தமிழ் நாகரிகத்தைச் சிதைக்கும் இந்நாட்களில் இக்கட்டுரை கற்பவர் உள்ளத்தில் சாதி சமய வெறிச்செயலைவிட்டு இளம் காதலர் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்து அன்புநெறியைக் காட்டும் அரிய செய்தியை உணர்த்துகிற காலத்தின் தேவை. திருக்குறள் மேலைநாட்டார் கற்றுத்தேர்ந்த அறிவு நூலாக மலர்ந்து வருவதைக் கட்டுரையில் படித்து இன்புறலாம். அடுத்த இதழிலிருந்து பேராசிரியர் ப.மருதநாயகம் "வீரசோழியம் வடமொழி சார்ந்ததா?" என்னும்

தலைப்பில் எழுதும் விரிவான கட்டுரை பகுதி பகுதியாகத் தொடர்ந்து செந்தமிழில் வெளிவரும்.

2019 பிப்ரவரித்திங்கள் 14, 15, 16 நாட்களில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தில் **தொல்காப்பிய பயிலரங்கம்** நடைபெற உள்ளது. கருத்தரங்கில் தமிழ்முதறிஞர் இரா.இளங்குமரனார், பேராசிரியர் ப.மருதநாயகம், மொழி நூலறிஞர் செ.வை.சண்முகம், பேராசிரியர் சி.சுப்பிரமணியபிள்ளை, பேராசிரியர் சு.அழகேசன், பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியம், பேராசிரியர் பெ.மாதையன், பேராசிரியர் மு.இளமுருகன், பேராசிரியர் இ.பேச்சிமுத்து, பேராசிரியர் தூ.சேதுபாண்டியன், பேராசிரியர் உ.ல.பாலசுப்பிரமணியம் மற்றும் பல அறிஞர்கள் கலந்துகொள்கின்றனர். ஆசிரியர்களும் மாணவர்களும் சிரத்தையுடன் கலந்து கொண்டு நிகழ்ச்சி வெற்றி பெறவும் அறிவைப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டுகின்றேன். அறிஞர் வரவினும் அதனைப் பயன்படுத்தும் கல்வியாளர்கள் மாணவர்கள் கலந்துகொள்வது முக்கியம் என்பதால் முன் தகவலாக இதனைத் தெரிவிக்கிறேன்.

பொன்.பாண்டித்துரைத் தேவரவர்கள் மீதியற்றிய சரமகவி

"இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த
 மாதியெலா மினிது தேர்ந்து
வளமைமிகு கம்பரா மாயண நூட்
 பங்களெல்லாம் வயதீ ரேழில்
தெளிவுபெறப் பலர் மகிழப் பிரசங்கஞ்
 செய்திடுநற் றிறமை வாய்ந்து
விளைபயிரி னியல்முளையில் விளங்குமெனு
 முதுமொழியை மெய்ப்பித் தாயே"

- பிரம்மஸ்ரீ ம.கோபாலகிருஷ்ண ஐயர்

2 சிலம்புப் புதையல்

போற்றா ஒழுக்கம்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

கண்ணகியாரொடு மதுரைக்கு வந்த கோவலன், சிலம்பு விற்கப் புறப்படுவதற்கு முன், தன் குறைபாடுகளையெல்லாம் நெஞ்சாரக் கூறி நெகிழ்கின்றான். அந்நிலையில் கண்ணகியார், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று சுட்டுவதைக், குறை போலக் கூறுவார் உளர். அதனைப் பற்றிக் கருதுவது இது.

தன் பிழையுணர்ந்து வருந்தும் கணவனிடம், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்பது கற்புக் கண்ணகியார்க்குத் தகுமா? இது திருந்தியவனை வருந்த வைக்கும் மொழியாயிற்றே" எனக் குறை காண்கின்றனர்.

கண்ணகியார் தனித்து உறைதலை உணர்ந்த கோவலன் தாய் தந்தையர், உள்ளகம் வருந்தினர். அவர்கள் உள்ளகம் வருந்துதல் ஆற்றாத கண்ணகியார், தாம் வருந்தவில்லை என்பதைக் குறிப்பதுபோல் "வாயல் முறுவல் செய்து" வாழ்ந்தனர். அதனைக் குறிக்கும் வகையாலேயே அவர், "உள்ளகம் வருந்தப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்றார். இதில், தம் உள்ளகம் வருந்திய குறிப்போ - வருத்திய குறிப்போ - இல்லை!

கண்ணகியார் வாயல் முறுவல் செய்தலைப் பட்டறிவும் பழுத்த அறிவும் ஒருங்கமைந்த மாமன் மாமியார் உணர்ந்து கொள்ளமாட்டார்களா, என்ன? அதனால், அவர்கள் உள்ளகம் வருந்தவே செய்தனர்; அதனையே குறித்தார் கண்ணகியார். ஆதலால், அவர் மேல் குறை காண இடமில்லை.

இனிப், "பெற்றோர்க்காகவே எனினும், கலங்கியும் கவன்றும் கரைந்தும் நிற்கும் கணவனிடம் இவ்வாறு கூறலாமா?" என அடுத்துத் தொடுப்பாரும் உளர். அவர்கள் "போற்றா ஒழுக்கம்" என்பதன் மரபு வழிப் பொருளை உணர்ந்து கொண்டால் இதனைக் குறையாகக் கருதார்.

போற்றா ஒழுக்கம் என்பதற்குப் பேணிக் காவாத குற்றம், பிறர் போற்றிக் கூறத் தகாத தவற்றொழுக்கம், பரத்தமை என்றெல்லாம் பொருள் கண்டு இவ்வாறு கூறுகின்றனர்.

"போற்றா ஒழுக்கம்" என்பதற்கு அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறினர் அல்லர். ஒன்றுக்கு மூன்று முறை "போற்றா ஒழுக்கம்" என்றே கூறியமைந்தனர். இதன் பொருள் என்ன? "இத்தொடருக்குப் பொருள் கூற வேண்டிய தேவை இல்லை; புலவர் உலகம் இத்தொடரின் பொருளை வெட்டவெளியாக அறியும்" என்பதே பொருளாம்.

இப்போற்றா ஒழுக்கத் தொடர் கொலைக்களக் காதையை அன்றி, வரந்தரு காதையிலும் வருகின்றது. ஆங்கும் அரும்பத உரையில் பொருள் இல்லை. அடியார்க்கு நல்லார் உரையோ கிடைக்கவில்லை! ஆதலால் ஆங்கும் இதே நிலைதான்!

வரந்தரு காதையில்,

"புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்
நிகழ்ந்ததற் கிரங்கும் என்னையும் நோக்காய்"

என்பது. இது கண்ணகியாரின் தாயார் கூற்றாக வருவது. தவறு சுட்டும் பொருளாக இஃதிருப்பின், கண்ணகியின் தாய் கூற்றாக - மாமியார் கூற்றாக இடம் பெறல் உண்டா, மரபுவழி உரிமை சிறிதும் பழித்துரைக்க இடந் தராதாம் என்பதைத் தமிழியலும், தமிழர் வாழ்வியலும் அறிந்தார் நன்கு கண்டு கொள்வர்.

பழி சுட்டாததாக இருந்தும், பழிச்சுட்டாகக் கொள்ளப் படலான இத் தொடரின் பழம் பொருளைக் கலித்தொகைத் தொடரொன்று கைந்நீட்டி அழைத்துக் காட்டித் தெளிவிக்கிறது. (133)

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

என்பது அது.

ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை, என்பவற்றைத் தொடராகக் கூறி விளக்கும் இப்பாடலில், போற்றுதல் என்பதன் பொருள் விளக்கம் கிடைக்கின்றது. இத்தொடர்க்கு "ஒன்றைப் பாதுகாத்தல் என்று சொல்வது, கூடினாரைப் பிரியாதிருத்தலை" என்று பொருளுரைக்கிறார் நச்சினார்க்கினியர்.

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை எனின், போற்றாமை என்பது புணர்ந்தாரைப் பிரிந்தமை தானே! "நீர் பிரிந்தீர்" என்பது தவறான செய்தியா? மயக்கம் தீர்க்க மரபு வழி உரை காணும் முறையைப் போற்றுதல் வேண்டும் என்று இப்போற்றா ஒழுக்கம் சுட்டுவதாகக் கொள்ளலாமோ?

மரு

பேரா **செ.வை.சண்முகம்,**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி : 98651 96476

1. முன்னுரை

தொல்காப்பியத்தில் 'மரு' என்ற அடிச்சொல்லும், 'மரீஅய' பெயரெச்ச வடிவமும், 'மரீஇயது' என்ற வினையாலணையும் பெயர் வடிவமும் காணப்படுகின்றன (பாலசுப்பிரமணியன். 2016:315). அது ஒரு இலக்கணக் கலைச்சொல் ஆகும்.

மரு (வுதல்) என்ற வினையடி, பொது வழக்கில் 'கலந்திருத்தல்', 'வழங்குதல்' என்ற பொருள் உடையது. அது முதனிலைத் தொழில் பெயராக, இலக்கணத்தில் சிதைந்த வழக்கு என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. பேச்சு மொழியில் நடந்த சில மாற்றங்களைச் சிதைந்த வழக்கு என்னும் போது; பேச்சு மொழியிலும் இயல்பான மாற்றம் இல்லாமல், கொச்சை வழக்கு என்று கருதத் தகுந்த மாற்றம் என்று கொள்ளத்தகுந்தது.

செய்யுளில் புலவர் செய்யும் மாற்றம் அல்லது மாறுபாடு 'திரி' என்ற சொல்லால் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பார்க்க, திரிசொல், செந்தமிழ் 112. ப.10-17). மரு என்பது அதனிலிருந்து மாறுபட்டது; பேச்சு மொழிக்கு உரியது.

> **'கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
> ***வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்'***
>
> (குற்றியலுகரப் புணர்ச்சி (78.2)

என்று செய்யுள் வழக்கிலும் அதாவது எழுத்து மொழியிலும் பேச்சு வழக்கிலும் ஏற்படும் சிறப்பு மாற்றங்களைத் திரி சொல், மரு என்று தொல்காப்பியம் வேறுபடுத்தியுள்ளது. இங்கு 'மருவொடு திரிந' என்று குறிப்பிட்டிருப்பது பேச்சு வழக்கு மாற்றத்துக்குள்ளும் இன்னொரு வகை இருப்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. அதே சூத்திரத்தில் தொடர்ந்து

'விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்' *(78. 3-5)*

என்று கூறியது மொழியில் நடைபெறும் மாற்றங்கள் பற்றிய தொல்காப்பியத்தின் பரந்துபட்ட பார்வையைப் புலப்படுத்துகிறது. இப்போது ஒரு குழுவினர் இந்த நூற்றாண்டில் நடந்த மாற்றங்களை வன்மையாகக் கண்டிப்பதைப் பார்க்கும்போது இந்த அடிகள் அந்த வழக்குகள் தோன்றியதற்கான காரணத்தையும் அவை மொழி அமைப்பில் ஏற்படுத்தியதை உணர்ந்து கொள் முயற்சி செய்வதே அறிவு சார் வழி என்று அவர்களுக்கு வழி காட்டுவது போல் அமைந்துள்ளது அறியத் தகுந்தது. மேலும் மொழி மாற்றத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குபவர்கள் இருப்பதை உணர்ந்து 'வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்/ நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்' என்று இலக்கண அறிஞர்களை நோக்கியது.

இதன் முக்கிய நோக்கம் மொழி அமைப்பில் மாற்றம் ஏற்படும் என்பது மொழியின் பொதுப் பண்புகளில் ஒன்று. அதை உணர்ந்து விளக்குவது அறிஞர்கடன் என்பது தொல்காப்பியர் ஒரு மொழியியல் சிந்தனையாளர் என்பதைப் புலப்படுத்துகிறது.

அகம் + கை > அங்கை (பு.ம.20) என்ற மாற்றத்தைக் குறிப்பிட்டுவிட்டு 'வரைநிலை இன்றே ஆசிரியர்க்க' என்று தொடர்ந்து சொல்லியுள்ளது பேச்சு மொழியில் நடைபெறும் மாற்றத்தை இலக்கண ஆசிரியர் தடுத்து நிறுத்த முடியாது என்ற பெரிய உண்மையை உணர்த்துவதாகும். மேலும் இன்னொரு இடத்தில் ஏழ் என்பது எழு அளவு, நிறை பெயர்களுக்கு முன் மாறுவதையும் (பு.ம.94) 'கடிநிலை அன்றே ஆசிரியர்க்க' என்று கூறியுள்ளதும் அறியத் தகுந்தது.

மேலும் சொல்லதிகார இறுதி இயலான எச்சவியலில் (56) 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்று வரலாற்று மாற்றத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குபவர்களுக்கு அறிவுரை கூறுவதுபோலக் குறிப்பிட்டுள்ளார். இங்குச் சொல் என்பது எழுத்து, சொல், தொடர், வாக்கியம், கருத்தாடல் ஆகியவைகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நன்னூலார் (462) இன்னும் ஒரு படி மேலே சென்று,

'பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல கால வகையி யானே'

என்பதைக் கடைசிச் சூத்திரமாக அமைத்தது காலந்தோறும் புதிய இலக்கணம் உருவாக்க வேண்டும் என்ற கருத்தை மறைமுகமாகச் சொல்லியுள்ளார்.

தொல்காப்பியமே தன் காலத்தில் தனக்குத் தெரிந்த பேச்சு வழக்கில் அதிக மாற்றம் பெற்றவைகளை நூலில் பதிவு செய்துள்ளது மொழியியல் நோக்கில் சிறப்பானது.

2. மரு – பயிற்சி

தொல்காப்பியம் கோட்பாட்டு நோக்கிலும் உதாரண நிலையிலும் சில வழக்குகளை மரு என்று நேரடியாகப் புணரியல் (9), தொகைமரபு (30.5) உயிர்மயங்கியல் (48), புள்ளிமயங்கியல் (20, 60), குற்றியலுகரப் புணரியல் (77, 78.2), வேற்றுமை மயங்கியல் (7), எச்சவியல் (47) ஆகியவைகளில் விளக்கியுள்ளது. மேலும் மருவாகக் கருதத் தகுந்தவைகளை மரு என்று குறிப்பிடாமல் உள்ள சூத்திரங்கள் அமைந்துள்ளதும் இங்கு எடுத்துக்கொண்டு விளக்கப்படும்.

மரு என்பது தொல்காப்பியம் சொல்லியல் நிலையிலும் அதுவும் புணரியல் நோக்கில் நிலையிலும், அகராதி (சிலசொற்களின் பயன்பாடு) நிலையிலும் அமைந்துள்ளதைக் குறிப்பிடுகிறது. நச்சினார்க்கினியர் தொடரியல் நிலையிலும் மரு அமைந்துள்ளது என்று கூறியது பிற்காலத்தவரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம் அதைத் தொல்காப்பியமே கூறிய ‘மொழி புணர் இயல்பு’களில் (எச்சவியல் 8) ஒன்றான மொழி மாற்று என்ற வகையில் (எச்சவியல் 15) கொள்ளலாம் என்பதுதான்.

பிற்கால இலக்கணங்கள் (நன்னூல், முத்துவீரியம், சுவாமிநாதம்) மரு கோட்பாட்டை விரித்து விளக்கியுள்ளன.

3. மரு: பொது விளக்கம்

‘மருவின் தொகுதி மயங்கியல் மொழி
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே’. (புணரியல் 9)

என்பதை மருவின் பொதுக் கோட்பாட்டை விளக்கும் சூத்திரமாகக் கொள்ளலாம் என்றாலும், தொல்காப்பியம் இந்தச் சூத்திரத்தைப் புணரியலின் பொதுக் கருத்தை விளக்கும் சூத்திரங்களுக்கு அடுத்து அமைத்துள்ளதால், புணரியல் நிலையில் அமையும் ஒரு வகையே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அறியத்தகுந்தது.

'மருவின் தொகுதி வடிவம், சொல் அமைவும் மயங்கி அதாவது மாறி வழங்குவது புணரியல் நிலை' என்பது நேர்ப் பொருள்.

'மயங்கியல் மொழி' என்பதை மருவின் தொகுதியின் விளக்கமாகக் கொண்டு, அந்தச் சொற்கள் புணரியலில் விளக்கப்படும் என்று இளம்பூரணர் பொருள்கொண்டு உரை எழுதி மீகண், முன்றில் என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார்.

அந்த இரண்டு சொற்களும் முறையே உயிர்மயங்கியலில் (48) 'மீயென மரீஇய இடம் வரை கிளவி' என்றும் புள்ளிமயங்கியலில் (60) 'தொல்லியல் மருங்கின் மரீஇய பெயர்' என்று தொல்காப்பியத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. கண்+மீ என்பது மீகண் என்று அமைந்துள்ளது என்ற முறையிலும், முன்+இல் என்பது முன்றில் என்று றகர மெய் சேர்த்து வழங்குவது என்ற முறையிலும் புணரியலில் அமைந்த மரு வழக்காகக் கருதப்படுகிறது.

ஆனால் தமிழ் மொழி அமைப்பைக் கவனித்தால் அவை மரு வழக்குகளாகக் கொள்வது விவாதத்துக்கு உரியவை ஆகிவிடுகின்றன.

உண்மையில் இடப்பொருளை உணர்த்தும் சொற்கள் முன்னால் அமைகிற ஒரு வழக்கு தமிழில் உண்டு. நாநுனி என்பதைத் தொல்காப்பியமே நுனி நா (பிறப்பியல் 9), என்றும், அது போல நா இடை என்பதை இடைநா (பிறப்பியல் 10) என்றும் பயன்படுத்தியுள்ளது. பொதுவாக ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகள் என்ற முறையில் பெயர்ச்சொல்லுக்குப் பின்னரே வரவேண்டும் என்று கருதி முன் வருவது (கண்மீ > மீகண்), மேலும் முன் இல் என்பது முன்றில் என்று றகரம் மிகுவதும் ஒரு காரணமாக அமையலாம். ஆனால் அவரே நுனிநா, இடைநா போன்றவைகளைப் பயன்படுத்தியிருப்பதும், இன்றைய வழக்கிலும் முன்வீடு, பின்பகுதி என்பவை போன்றவை வழக்கிலும் காணப்படுவதும்; தமிழ்மொழி அமைப்பு விளக்கத்தில் இடத்தை உணர்த்தும் இடைச்சொற்கள் தலைச்சொல்லுக்கு முன்னும் வரும் என்று இலக்கணப்படுத்த வேண்டும். அப்போது அவை மருவாகக் கருதவேண்டியது இல்லை என்று ஆகும்.

'மருவின் தொகுதி மயங்கியல் மொழி' என்ற தொல்காப்பியத் தொடரை இளம்பூரணர் அப்படியே ஏற்றுக்கொண்டு 'மரூஉத் திரள்' என்றும், நச்சினார்க்கினியர் 'மரு தொகுதி + இன் தொகுதி' என்று கொண்டு 'மருவிய சொற்களும் செவிக்கு இனியதாகிய சொற்றிரள்' என்று பிரித்து உரை எழுதி, கவிதையில் தொடரியல் நோக்கில் அமையும்

திரிபுகளையும் மருவின் வகையாகச் சேர்த்துள்ளார். அதனால் 'இன்தொகுதி' என்றார் பா என்னும் உறுப்பு நிகழப் பொருள் ஒட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்' என்று நச்சினார்க்கினியர் கூடுதல் விளக்கத்தை இணைத்துள்ளார்

இங்கு உரையாசிரியரின் உரை உத்தி ஒன்று புதைந்துள்ளது. அதாவது சூத்திரத்தின் வாசகத்தையே வேறு விதமாகப் பிரித்துப் புதிய கருத்து களை ஏற்றிக் கூறுவது என்பது. அது பாடபேத ஆய்வில் 'பாட விளக்கம்' என்று குறிப்பிடப்படுகிறது (சண்முகம், 2010: 215). 'தகையவாய்' (குறள்.643) என்பதை மணக்குடவர், தகைய + ஆய் என்று பிரித்துப் பொருள் எழுதப், பரிமேலழகர், தகை + அவாய் என்று பிரித்துப் பொருள் எழுதியுள்ளது இன்னொரு உதாரணம். இந்தச் சூத்திரத்தின் நச்சினார்க்கினியரின் உதாரணம் பின் பகுதியில் $4 தொடரியல்).

3.1. கூடுதல் பண்புகள்

'இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ, வழக்கல்லா மரூஉ வழக்கோடும் புணர்க்கப்படும் எனக் கொள்க' என்று இளம்பூரணர் இரண்டு வகை இருப்பதாகக் குறிப்பிட்டு, தொல்காப்பியர் கருத்தாகக் கொள்ள வைக்கச் சூத்திரத்தில் 'நிலை' என்றதனால்... கொள்க' என்று குறிப்பிட்டுள்ளார். இது தன் கருத்தை நூலின் மேல் ஏற்ற உரையாசிரியர்கள் கையாளும் ஓர் உரை உத்தி. எப்படியாயினும் அது இளம்பூரணர் கண்டறிந்த மருவின் வகைகள் என்று நாம் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியமே மருவை விளக்கும்போது தொல் வழக்கு, வழக்கு அதாவது பேச்சு வழக்கு என்ற பண்புகளைக் குறிப்பிட்டுள்ளது அந்த வழக்குகளின் கூடுதல் விளக்கங்களாகக் கொள்ளலாம்.

3.1.1 தொல்வழக்கு

மருவை விளக்கும்போது 'தொல்லியல் மருங்கு' ('தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே' புள்ளி மயங்கியல் 60.3) என்றும் 'பண்டியல் மருங்கு ('பண்டியல் மருங்கின் மரீஇய மரபே' வேற்றுமை மயங்கியல் 7.2) என்று கூறுவதால், கவிதை மொழியில் 'தொல்வழக்கு' என்று (சண்முகம் 2014:43) இலக்கிய மொழியியலில் குறிப்பிடும் கூறும் கலந்துள்ளது என்று ஆகிறது.

தொல் வழக்கு என்பது இலக்கியம் எழுதப்பட்ட கால மொழியில் வழக்கில் இல்லாத, பழைய கால வழக்கு வழங்குவது ஆகும்.

'இலக்கணம் உடையதன்றிப் படைப்புக் காலத்து இலக்கணம் உடையதொடு ஒருங்கு படைக்கப்பட்டு வருவன' என்ற சிவஞான முனிவர் நன்னூல் விருத்தியுரையின் (267) விளக்கமும் அறியத்தகுந்தது.

தொல்காப்பியமே 'ஒன்பது' என்பதைத் 'தொண்டு' என்று குறிப்பிட்டுள்ளது தொல்வழக்கே. அதன் எச்சசொச்சமாகத்தான் தொள் என்பதை அடையாகத் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற சொற்களில் பயன்படுத்தப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் இரண்டு என்பது இரணை (நற்றிணை 123) என்றும், நான்கு (17 தடவை) என்பது நால்கு (நாலு தடவை. அகநானூறு. 104,6 முதலியன) என்றும் பதிவாகியிருப்பது தொல் வழக்குகளே. பாரதி குயில்பாட்டில் (135) 'தெரிகிலன் யான்' என்பதில் கில் என்ற துணைவினை 'அன்' என்ற தன்மை ஒருமை விகுதி யான் என்ற தன்மை ஒருமைப்பெயர் வடிவம் ஆகியவை தொல் வழக்கு வடிவங்களே, அதாவது அவை சங்க கால வழக்கு.

எல்லாக் கால இலக்கியங்களில் அதன் முந்தைய கால வழக்குகள் சிறுபான்மையாக அமைந்திருப்பது தொல் வழக்குகளாக இலக்கிய மொழியியலில் கொள்ளப்படுகிறது. அவைகளை 'இலக்கணத்தொடு பொருந்திய மரூ' என்று உரையாசிரியர்களும் 'இலக்கணப் போலி' என்று நன்னூலாரும் (267) குறிப்பிட்டுள்ளார்கள்.

அந்த முறையில் முன்றில் என்பதும் ஒரு தொல் வழக்கே. முன் என்பது சில கிளை மொழிகளில் *முன்று என்ற தொல்வழக்கு தக்க வைத்திருக்க வேண்டும். தமிழில் முன் என்ற பொருளில் முந்து (பதிற்றுப்பத்து 42.17), முந்தை (நற்றிணை 355.6) என்ற வடிவங்கள் பிற திராவிட மொழிகளிலும் (DED.4119) காணப்படுவதால் முந்து என்பதன் தொல் வழக்கு வடிவமாக *மூன்று அமைந்திருக்கலாம். அதாவது முன் என்பது தகரத்தோடு புணரும் போது *முன்று என்று அமையும். அது முன்றில் என்ற சொல்லில் மட்டும் தக்கவைக்கப்பட்டுள்ளது என்று ஆகிறது. எனவே அன்றைய பெரு வழக்கை ஒட்டியும், விளக்கமுறை இலக்கணக் கோட்பாட்டை ஒட்டியும், முன் என்பதன் மாற்று வடிவமாக விளக்கினாலும்; 'தொல்லியல் மருங்கின் மரீஇய மரபு' என்று கூறியது அவருடைய வரலாற்று மொழி அறிவையும் பதிவு செய்துள்ளது சிறப்பானது.

இளம்பூரணர் கருத்துப்படி முன்றில் முதலியவை இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ ஆகும்.

3.1.2. பேச்சு வழக்கு

வழக்கல்லா மருஉவுக்கு இளம்பூரணர் உதாரணம் கொடுக்காவிட்டாலும் அருமருந்தன்ன என்பது அருமந்தன்ன என்று அமைவது நன்னூல் உரையாசிரியர்கள் தரும் உதாரணம் பொருந்தும்.

தொல்காப்பியர் கூறும் 'வழக்கு' என்பது மருக்களில் பேச்சு வழக்கும் அடங்கும்.

யாவர் என்ற பலர்பால் வடிவம் யார் என்றும், யாது என்ற ஒன்றன்பால் வடிவம் யாவது என்றும் மாறுவதை 'மருவின் பாத்தியின் திரியும்மன் பயின்றே' என்று தொகைமரபில் (30.5) குறிப்பிடப்பட்டுள்ளது.

வினையியலில் (13) யாஅர் என்ற சொல் உயர்திணை மூன்று பாலுக்கும் உரிய வினை முற்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யார் என்ற வடிவம் பொருளதிகாரத்தில் செய்யுளியலிலும் (168.2, 189.2) மரபியலிலும் (75.2) பயின்றுள்ளன.

யாவர் என்ற சொல் பேச்சு மொழி வழக்கில் எல்லோரும் பயன்படுத்தும் சொற்களில் ஒன்று. அதனால்தான் வடிவமாற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றே கருதவேண்டியிருக்கிறது. யாவர் என்பது இரண்டு உயிர்களுக்கு இடையே இருப்பதால் வகர மெய் கெடுதல் என்ற ஒலி மாற்றம் நடைபெற்றிருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்பே யாஅர் என்பது. தொல்காப்பியம் வினையியலில் (13)
'யாஅர்' என்பதை வினைமுற்றாகக் கூறியது அதன் செயல்பாட்டு அடிப்படையில் அமைந்தது. யாஅர் என்பது அடுத்த நிலையில் யார் என்று மாறியது. அதாவது அவருடைய காலத்திலேயே இரண்டு ஒலி மாற்றங்கள் 1) வ்-->Ø/ யா-அர் 2) அ--> Ø/ யா-ர் ஏற்பட்டதை விளக்கமுறை மொழியியல் நோக்கில் குறிப்பிட்டுள்ளார் என்று கொள்ளலாம்.

அஃறிணைச் சொற்களாக யாது, யா, யாவை என்ற மூன்று சொற்கள் பெயரியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. யாது ஒன்றன்பால் சொல். யா/யாவை பலவின் பால் சொற்கள். சங்க இலக்கியத்தில் யாது (39தடவை), யாதும் (4), யாவது (21) யாவதும் (19 தடவை) பயின்றுள்ளன. உயர்திணையில் யாவன்/யாவள்/யாவர் என்ற வடிவமும் பலவின் பால் வடிவமாக யாவை என்ற வடிவமும் இருப்பதால் ஒப்புமையாக்கத்தால் யாவது என்ற வடிவம் பேச்சு வழக்கில் அமைந்திருக்கலாம். எனவே அவர் காலத்தில் நடைபெற்ற மொழி மாற்றத்தை மரு என்று குறிப்பிட்டதோடு 'திரியுமன் பயின்றே' என்பதால்

பெரு வழக்காக வழங்கியதையும் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது என்று ஆகிறது.

'மீ என மரீஇய இடம் வரைக் கிளவி'

என்பது உயிர்மயங்கியலில் (48)

குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அதன் இலக்கண வடிவு என்ன? என்ற கேள்வி எழுகிறது. மீமிசை என்ற தொடர் இலக்கியத்தில்

'தண் கலுழ் மீமிசைத் தாஅய' (குறுந்.200-2)

'உறுகல் மீமிசை' *(குறுந்.284.2)*

நெடுந் தேர்மீமிசை நுடங்கு கொடி (பதிற்றுப்பத்து 80.14) என்று காணப்படுவதால் மிசை என்ற சொல்லின் மருவடிவாக 'மீ' என்பதைக் கருதினாரா என்று நினைக்கத் தோன்றுகிறது. அது வல்லெழுத்து வரு மொழி அமையும்போது மிகுந்து முடியும் என்பது சூத்திரக் கருத்து. எனவே உரையாசிரியர்கள் மீக்கோள், மீப்பல் என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார்கள். 'மன்மீக்கூறுநர்' என்று பதிற்றுப்பத்து (1.25) உரையாசிரியர்கள் மெல்லினம் மிகுந்து வந்துள்ள உதாரணங்களையும் (மீங்குழி, மீந்தோல்) கொடுத்துள்ளார்கள்.

பதிற்றுப்பத்தில் இயல்பு புணர்ச்சியும் 'துணங்கை மீ பிணத்து உருண்ட' 77.5) அமைந்துள்ளது.

3.1.2.1. மரு என்று கூறாத பேச்சு வழக்குகள்

தொல்காப்பியம் மரு என்று குறிப்பிடாவிட்டாலும் பின் காணும் வழக்குகள் மொழியியல் நோக்கில் மரு வழக்குகளாகக் கருதத் தகுந்தவையே.

அ) சாவ என்ற செயவென் வினையெச்சம் சா(க்குத்தினான்) என்று மாறும் என்பதை 'இறுதி வகரம் கெடுதலும் உரித்தே' என்று உயிர்மயங்கியலில் (7) கூறியதும் மரு வழக்காகக் கொள்ளத் தகுந்ததே

ஆ) ஆன் + பீ > ஆப்பி என்று மாறுவதை உயிர் மயங்கியலில் (31) 'தான் மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே' என்று பொதுவாகக் கூறினாலும் மரு வழக்காகக் கருதத் தகுந்ததே. இது பற்றிய உரையாசிரியர்கள் கருத்து பிற்பகுதியில் விளக்கப்படுகிறது.

இ) னகர ஈற்று இயற்பெயர் முன் தந்தை என்ற சொல் வந்தால் தந்தையின் சொல் முதல் அகரமும் நிலைமொழியின் இறுதி அன்னும் கெடும். சாத்தன் + தந்தை > *சாத்த் + அந்தை > சாத்தந்தை. (புள்ளிமயங்கியல் 51)

ஈ) ஆதன் + தந்தை > ஆந்தை என்று மாறுவது

(புள்ளிமயங்கியல் 52)

அவை மருவுக்கு நல்ல உதாரணமாக அமையும். ஆதன் தந்தை என்பதில் நாநுனி ஒலியான தகரம் திருப்புரையாக (*தன்தந்) அமைந்துள்ளதால் ஒரு அசை கெட்டுள்ளதாக (அசைகெடல் (haplology) வரலாற்று நோக்கில் விளக்கப்படும்.

4. தொடரியல் மரு

சொல்லியல் நிலையில் மரு அமைவதோடு, தொடரியல் நிலையில் பாடல்களில் சொற்கள் இடம் மாறி வருவதைக் கவனித்த நச்சினார்க்கினியர் அதையும் மருவின் வகையாகச் சேர்க்கப் புதுப் பாடவிளக்கம் செய்து உதாரணங்களைக் காட்டியுள்ளார்.

'மருவின் தொகுதி' என்ற மூல பாடத் தொடரை 'மருவிய சொற்களும் செவிக்கினிதாக சொற்றிரள்' என்று நச்சினார்க்கினியர் பிரித்து உரை எழுதியதோடு விளக்கவுரையில் "இன் தொகுதி' என்றார் பா என்னும் உறுப்பு நிகழப் பொருள் ஒட்டாமல் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்' என்று குறிப்பிட்டு உதாரணங்களைக் கொடுத்துள்ளார். மேலும் உதாரணங்கள் கொடுக்கும் போது இளம்பூரணர் கருத்தைத் தழுவி 'இலக்கணத்தொடு பொருந்திய மருஉ' என்றும் 'இலக்கணம் அல்லா வழங்கியல் மரு' என்றும் வகைப்படுத்தியுள்ளார். 'வழங்கியல் மருங்கின் மருவொடு திரிந' என்று எழுத்ததிகார இறுதிச் சூத்திரத்தில் (குற்றியலுகரப் புணரியல் 78.2) அமைந்துள்ளதாகவும் இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப' (*அகநானூறு.4.2.4*)

(இரும்பை முறிக்கிவிட்டாற் போன்ற கரிய பெரிய கொம்புகளை உடைய கலைமான்கள் பரற்கற்களைக் கொண்ட பள்ளத்தில் சென்று துள்ளிக் குதிக்க) என்புழி * மருப்பின் இரலை என்று ஒட்டி இரண்டாவதன் தொகையாக (மருப்பினை உடைய பரலை) தொகையாகப் பொருள் தந்து 'புள்ளி யீற்று முன் உயிர் தனித்து இயலா' (புணரியல், 36) என்று உயிர் ஏறி முடிந்து மயங்கி நின்றது. ஆயின் 'மருப்பிற் பரல்' என்று மெய் பிறிதாய் ஒட்டி நின்றவாறு என்னையெனின், 'மருப்பினையுடைய பரல்' என்று வேற்றுமைத் தொகைப் பொருள் உணர்த்தாமையின், அஃது செய்யுட்கு இன்னோசை நிகழ்தற்குப் பகரத்தின் முன்னர் நின்ற னகரம்

றகரமாய் திரிந்துநின்ற துணையேயாய்ப் புணர்ச்சி பயன் இன்றி நின்றது. இங்ஙனம் புணர்ச்சி எய்தினாற் போல மாட்டிலக்கணத்தின் கண்ணும் மொழி மாற்றின் கண்ணும் நிற்றல் இயல்பு என்பதற்கு அன்றே ஆசிரியர் 'இன் தொகுதி என்றது என்று உணர்க' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். * 'மருப்பின் இரலை பரல்' என்று பொருள் நோக்கில் அமைய வேண்டியது * 'மருப்பின் பரல் அவல் அடைய இரலை' என்று பாட்டில் அமைந்துள்ளதால் அது 'மருப்பிற் பரல்' என்று புணர்ச்சி பெற்று பாட்டு இன்னோசை பெறுகிறது என்பது அவருடைய கருத்து. அவரே குறிப்பிட்ட செய்யுள் உறுப்புகளில் ஒன்றான 'மாட்டு' இலக்கணப்படி (தொல்காப்பியம் செய்யுள், 1) மொழிமாற்று பெற்று, 'மருப்பின் பரல்' என்று அமையும்.

பொதுவாகப் புணர்ச்சி மாற்றம் புறநிலை அமைப்பை ஒட்டி அமைபவை என்ற அடிப்படைக் கோட்பாடு குறிப்பிடத்தகுந்தது. அதன்படி மருப்பின் பரல் மருப்பிற் பரல் என்று மாறியுள்ளது. அதற்கு இன்னோசை காரணம் இல்லை.

உண்மையில் *இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின் / இரலை பரலவல் அடைய தெறிப்ப' என்று தொடரியல் புதைநிலை அமைப்பு, அடிமோனைத் தொடை (இரும்பு... இரலை) மட்டுமே அமைந்து, இரண்டாவது அடிஓசை அதாவது வண்ண ஓசை கெடுகிறது. மாறாக 'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின் / 'பரலவல் அடைய இரலை தெறிப்ப' என்று கூறும்போது, அடி இன பொழிப்பு எதுகையும் ('இரும்பு.../ பரலவடைய), இரண்டாம் அடிக்குள் முன் பொழிப்பு எதுகையும் (பரலவல் அடைய இரலை தெறிப்ப) பின் பொழிப்பு எதுகையும் (...அடைய...தெறிப்ப) பெற்றுப், பாடல் இன் ஓசை மிகுதி உடையதாக அமைகிறது.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி 'மொழிமாற்றும் ஒரு வகை மரு ஆகிறது. கவிதையில் சொற்களில் இட மாற்றம் இருப்பதைத் தொல்காப்பியமே 'மொழிபுணர் இயல்பு' என்ற தலைப்பில் ஆறு வகைப்படுத்தியுள்ளதாலும் (எச்சம் 8), நச்சினார்க்கினியரே மொழி மாற்று என்ற வகையை விளக்கும் அந்தச் சூத்திர உரையில் (எச்சம்.13) இந்த அடிகளை உதாரணமாகக் கொடுத்துள்ளதாலும், மொழி மாற்று என்று கொள்வதே சிறப்பு; மரு என்று கொள்ள வேண்டியது இல்லை. வேங்கடராகுலு ரெட்டியாரும் (பார்க்க, சிவலிங்கனார் 1982:48) 'மொழி மாற்றுப் பொருள்கோளாய் அமைத்துக் கொள்ளுதல் பொருந்தும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நச்சினார்க்கினியர், தன் கருத்தை வலியுறுத்த இன்னும் மூன்று உதாரணங்களைக் கொடுத்து விளக்கியுள்ளார்.

1) "கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினைக் / கடியுடை...' (அகநானூறு. 3.2) என்புழி ஓமைச் சினை ஒன்று ஒட்டி ஓமையினது சினை என்று பொருள் தருகிறது. இன்னோசை தருதற்குக் ககர ஒற்று மிக்குக் 'காண்பின்' என்பதனோடும் ஒட்டினாற்போல நின்றது'
என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். இங்கு ஓமை, சினை என்பவை தொடரியல் நோக்கில் தலைச் சொற்கள் எனப்படும். 'கருங்கால் ஓமை + காண்பின் பெருஞ்சினை' என்று அவை இரண்டு தொடர்களாக அமைந்துள்ளன. அதாவது இரண்டு தலைச் சொற்களும் அடை பெற்று அமைந்துள்ளன. அடை பெறுதல் கவிதை மொழியின் சிறப்பு. மேலும் அடை அவைகளின் பண்பை விளக்குவதாகவும் அமையும். அதன்படி கரிய அடிப்பகுதி உடையது என்பதை விளக்குமுகமாகக் 'கருங்கால்' என்ற அடை சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படியே அதன் சினை (கிளை) பெரியதாக உள்ளது என்பதற்காகக் 'காண்பின்' என்ற அடையும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே ஓமை, சினை என்ற இரண்டு தலைச் சொற்கள் கவிதை மொழியில் அமைவது இயல்பானது. எனவே, அவைகளை மருச் சொற்களாகக் கருத வேண்டியது இல்லை. 'ஓமைக் காண்பின்' என்று இடையில் ககரம் இரட்டித்துள்ளது அது தொடர் என்று கருதவைக்கிறது. வாழை + பழம் என்பது வாழைப்பழம் என்று பகர மெய் அது ஒரு தொகை என்று கருத வைக்கிறது. மேலும் பகரம் கூடுதலாக வந்துள்ளது உச்சரிப்பில் இயல்பானது. அதுபோலவே 'ஓமைக் காண்பின்' என்று ககரம் மிகுந்துள்ளது. எனவே இங்கு மரு எதுவும் இல்லை. ஆகவே நச்சினார்க்கினியர் விளக்கம் பொருந்தாது.

உண்மையில் இந்த அடிக்குள் இன பொழிப்பு மோனையும் (கருங்கால் (ஓமைக்) காண்பின்...) அடுத்த அடியை நோக்கும் போது '(பெருஞ்சினைக்) / கடியுடை... என்று இருப்பதால் இந்த அடிக்குள் ஒரூஉ இயைபும் அமைந்து (கருங்கால் ஓமைக் + காண்பின் பெருஞ்சினைக்/கடியுடை) ஒலிநயம் மிகுகிறது. அடுத்த அடியை நோக்கும்போது அடி மோனை அமைந்து இன்னோசை இன்னும் மிகுகிறது. அதாவது மரு எதுவும் அமையாமல், கவிதையின் பண்பால் அதாவது தொடை அமைப்பால் இன்னோசை மிகுந்துள்ளது. இங்கு மொழி மாற்று எதுவும் இல்லை. கருத்தாடல் நோக்கில் தலைச் சொற்களுக்கு அடை கொடுத்து அதன் பெருமையை விளக்கித் தொடை அமைந்துள்ளதால் இன்னோசை பெற்றுள்ளது.

2) 'தெய்வ மால்வரைத் திருமுனி யருள' (சிலம்பு. 3.1) என்புழித் தெய்வ வரை என்று ஒட்டித் தெய்வத் தன்மையுடைய வரை எனப் பொருள் தருகின்றது. இன்னோசை தருதற்கு மால் என்பதோடும் ஒட்டினாற் போலக் குறைந்து நின்றது. மூன்று திரிபும் வந்தவாறு காண்க' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

தெய்வம் + மால் > தெய்வ மால் = கெடுதல் திரிபு. வரை + திருமுனி > வரைத் திருமுனி = தோன்றல் திரிபு. முனி + அருள > முனி யருள மெய்பிறிதாதல் திரிபு. இங்குத் தெய்வம், வரை என்பவை தலைச்சொற்கள். அவைகளில் வரை என்பது மால் (பெருமை) என்ற அடை பெற்று வந்துள்ளது. இங்கு நடைபெற்ற புணர்ச்சி மாற்றங்கள் புறநிலையில் இயல்பாக அமைபவையே. அவை மரு என்பதற்கோ, இன்னோசை என்பதற்கோ இடம் இல்லை.

3) *'பொன்னோடைப் புகரணிநுதல்*
துன்னருந்திறல் கமழ்கடாஅத்து
எயிறுபடையாக எயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்திற் கூற்றத் தருந்தொழில் சாயா' (புறநானூறு. 3.7-12)

என்ற அடிகளை எடுத்துக்காட்டி 'எச்சத்தின் கண்ணும் மாட்டாய் ஒட்டி நின்றது. 'கயிறுபிணி கொண்ட' என்பதனோடும் ஒட்டினாற் போல நின்று ஒற்றடுத்தது இன்னோசை பெறுதற்கு' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

இங்குப் பொருள் நிலையில் முதல் இரண்டு அடிகள், நாலாவது ஐந்தாவது அடிகளோடு இணைய; மூன்றாவது அடியும் ஆறாவது அடியும் இணைகின்றன.

'மாட்டாய் ஒட்டி நின்றது' என்று நச்சினார்க்கினியர் கூறியது மாட்டு (தொல்காப்பியச் செய்யுளியல், 208) என்ற உத்தியைத் தழுவியது என்பது வெளிப்படை.

உண்மையில் முதல் அடி, யானையின் நுதல் பற்றிய வருணனை; இரண்டாவது அடி, அதன் ஒரு பண்பு (மதம்) பற்றிய வருணனை; மூன்றாவது அடி, வீரனின் செயல்கள்; நாலாவது அடி, யானையின் புறநிலை வருணனை (முதுகின் இரண்டு பக்கமும் மணிகள் கட்டியிருப்பது); ஐந்தாவது அடியின் முதல் இரண்டு சீர் யானை பற்றிய

நேரடிக் குறிப்பு; அடுத்த இரண்டு சீரும் ஆறாவது அடியும் வீரனின் செயல்கள். அதாவது யானையின் வருணனையும் வீரனின் செயலும் மாறி மாறி அமைந்துள்ளதால், வாசகருக்குக் குழப்பம் ஏற்படும். அதனால் மொழி மாற்று செய்து உரைகள் அந்தக் குழப்பத்தைப் போக்கும்.

அதே சமயத்தில் கவிஞர் ஏன் இப்படிப் படைத்தார் என்பது இலக்கிய மொழியியல் நோக்கு கேள்வி எழுப்பிப், பதில் காண முயல வேண்டும். அதாவது கருத்தாடல் நோக்கில் எதிர்பார்ப்பு உத்தியும், திடுக்கிடும் உத்தியும் கலந்து வாசகரைக் கவிதையைத் தொடர்ந்து படிக்கும்படி வைக்கும் என்பது ஒன்று. அதே சமயத்தில் யாப்பு நோக்கில் ஆறு அடிகளில் மூன்று அடி எதுகைத் தொடை அமைந்துள்ளதால் பாட்டின் ஒலிநயம் மிகுகிறது என்பதும் அறியத் தகுந்தது.

முதல் இரண்டு அடியும் ('பொன்னுடை..../துன்னரும்...') யானை பற்றிய வருணனை என்ற முறையில் பொருளாலும் யாப்பாலும் இணைகின்றன. ஆனால் அடுத்த இரண்டு அடி ('எயிறு படை..../ கயிறு பிணி...') கருத்தால் முதல் அடி யானை வருணனை, அடுத்த அடி வீரன் வருணனை என்று கருத்து மாறுபட்டாலும் யாப்பால் அடி எதுகை பெற்று இணைந்து ஓசை இன்பம் பெறுகிறது. இன்னும் கவனமாகப் பார்த்தால், 'எயிறு படையாக' என்பது ஒரு வகையில் யானையோடு தொடர்பு உடையது ('களிறு எயிறு படையாக') என்று அமைவது என்ற முறையிலும் ஒரு யாப்பலகாக அமைந்ததாக நியாயப்படுத்தலாம். கடைசி இரண்டு அடி ('பெருங்கை..../மருந்து....') யானை கருவியாக வீரன் செயல் என்ற முறையில் கருத்து ஒற்றுமை அமைகிறது. பொருள் நிலையில் மாற்று இருந்தாலும், யாப்பு நிலையில் அடி எதுகைகள் பெற்று ஒலி இன்பம் அமைகிறது. எனவே கவிதை வாசிப்பு பொறுமையாகச் சிந்தனையோடு அமைய வேண்டும்.

5. மருவின் வகைகள்

குற்றியலுகரப் புணரியலில் (77.10) 'மருவின் பாத்திய' என்று நாலு வகை குறிப்பிட்டுவிட்டு 'அன்னவை எல்லாம் மருவின் பாத்திய' என்றும் கூறியுள்ளதால் இன்னும் சில வகை இருக்கலாம் என்று தொல்காப்பியம் கருதுவது புலனாகிறது. தொல்காப்பியம் குறிப்பிட்ட நாலு வகைகள்: 1. 'குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவி' என்பதால் 'குறைச்சொல் கிளவி'யிலேயே மூன்று உள்வகைகள் அமைந்துள்ளன என்பது பெறப்படுகிறது. அ) குறிப்பு குறைச்சொல் - விண் விணைத்தது அது விண்ணென விணைத்தது

என்பதன் குறைச் சொல் (இளம்பூரணர்), விண்ண விணைத்தது என்பதன் குறைச்சொல் (நச்சினார்க்கினியர்), 'என' என்பது கெட்டதால் மரு.

ஆ) பண்பு குறைச்சொல் = கார் கறுத்தது (இளம்பூரணர்). நச்சினார்க்கினியர் ஆடை வெள்ள விளர்த்தது/ வெள்விளர்த்தது என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார். இது ஒலிக் குறிப்புச் சொல். வெள்ளென என்று பொதுவாகப் பயன்படுத்தப்படும். வெள்ள/வெள் என்று சில இடங்களில் 'என' சேர்க்காமல் பயன்படுத்தியிருப்பது மரு என்று கொள்ளப்பட்டிருக்கிறது.

இ) இசைக் குறிப்பு = ஒல்லொலித்தது, (இளம்பூரணர்) கடல் ஒல்ல ஒலித்தது, ஒல்லொலித்தது, 'ஒல்லொலி நீர் பாய்வதே போலும்' என்ற செய்யுள் உதாரணம். (நச்சினார்க்கினியர்).

இவை மூன்றும் ஒலிக் குறிப்புச் சொற்களே. ஒலிக்குறிப்புக்கு உரிய 'என' அமையாததால் மரு என்று கொள்ளப்பட்டுள்ளது.

2. பண்பு தொகு மொழி = கரும் சான்றான் என்ற உதாரணத்தைக் கொடுத்தது இளம்பூரணர் கொடுத்து, கரியான் சான்றான் என்பதன் தொகை வடிவம். கரியான் சான்றான் என்ற பொருள் உணர்த்தினாலும் தமிழ்மொழி அமைப்பில் பெயரைப் பால் காட்டாத பொது வடிவம் என்பதால் குறைசொல்லாகக் கருதமுடியாது. கரும்பார்ப்பான் கரும்பார்ப்பினி கரும்பார்ப்பார், கருங் குதிரை, கருங் குதிரைகள் என்ற உதாரணங்களை நச்சினார்க்கினியர் கொடுத்து கரியனாகிய பார்ப்பான், கரியளாகிய பார்ப்பினி, கரியதாகிய குதிரை, கரியவாகிய குதிரைகள் என்று விரிந்த பொருள் உடையது என்று கொண்டு, தொக்கதாக விளக்கியுள்ளார். மேலே கூறியபடி அவை விளக்கமே தவிர பண்புத் தொகையைப் பால்திணை உணர்த்தும் பண்புச் சொல்லின் சுருக்கமாகக் கொள்ள முடியாது.

தமிழ்மொழி அமைப்புப்படி, பண்புச்சொல் பால் உணர்த்தாத அடைபெற்று வருவது. நல்ல பையன், நல்லபெண் என்பவை இயல்பான வழக்குகள். ஹிந்தியில்தான் அச்சா லடுக்கே, 'நல்ல பையன்', அச்சி லடுக்கி 'நல்ல பெண்' என்று பண்புச் சொல்லும் பால் காட்டும் விகுதி பெற்று வருவது அந்த மொழியின் பண்பு. எனவே இந்த வகைக்கு உதாரணம் தேட வேண்டும்.

3. தொழில் தொகு மொழி = 'கொல் யானை. வினைத்தொகை, கொல்லென தொழின்மை உணர நின்றது. கொன்றெனக் காலங் காட்டி நின்றமையின் புணர்க்கப்படாது ஆயிற்று' என்பது இளம்பூரணர்

உதாரணமும் விளக்கமும். கொல்லென தொழின்மை உணர நின்றது என்பது அது மருச்சொல்லாகக் கருதமுடியாது, இது வினைத்தொகை என்ற தொகை வகையில் அடங்கும். நச்சினார்க்கினியரும் அதே உதாரணங்களைக் கொடுத்து அதே விளக்கங்களைக் கொடுத்துள்ளார்.

நச்சினார்க்கினியர் அரிவாள் என்ற ஒரு உதாரணத்தையும் கொடுத்துள்ளார். அது வினைத் தொகையாய் அமைந்தாலும் ஒரு பெயர்ச்சொல் என்ற முறையிலே வழங்குகிறது. அதனால் நல்ல அரிவாள் என்று கூறலாம். ஆனால் கொல் யானை என்ற வினைத் தொகையை நல்ல கொல்யானை என்று கூற முடியாது. இதுபோன்ற மாற்றத்தைக் கருத்தில் கொண்டு மரு என்று கருதினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

4. எண்ணின் தொகுதி = ஒரொன்று என்ற உதாரணத்தை இளம்பூரணர் கொடுத்து 'ஒன்றுஒன்று'ஆகக் (கொடு) என்று விளக்கியுள்ளார். நச்சினார்க்கினியர் பப்பத்து என்பது பத்துபத்து என்று விளக்கியுள்ளார். எனவே ஓரொன்று, பப்பத்து என்பவை புணர்ச்சி நிலையைப் பெற்றுள்ளதாலும் பேச்சு வழக்கில் முதலில் அமைந்து, பின்னர் எழுத்து மொழிக்குச் சென்றது இலக்கண நோக்கில் எண்ணின் தொகுதி என்று கருதப்படுவதால் மரு என்பது பொருத்தமானதே.

5. 'அன்ன பிறவும்' என்று தொல்காப்பியம் கூறியதற்கு உரையாசிரியர்கள் பகுபதச் சொற்களை உதாரணமாகக் காட்டிப் 'பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க' என்பது விவாதத்துக்கு உரியது.

'உண்டான், கரியன் என்பன உண் எனவும் கருமை எனவும் பிரித்து ஆனும் இன்னும் குறித்துவருகிளவி அன்மையான், வந்து புணராமையின் புணர்க்கப்படாவாயின' என்பது இளம்பூரணர் உதாரணமும் விளக்கமும்.

'உண்டான் என்புழி உண் என்னும் முதனிலையும் காலங் காட்டும் டகரமும் இடனும் உணர்த்தும் ஆனும் ஒன்றோடு ஒன்று புணர்க்கப்படா அவை நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியும் அன்மையின்' என்பது நச்சினார்க்கினியர் உதாரணமும் விளக்கமும்.

தொல்காப்பியம் பெயர்ச்சொற்கள் சாரியை, வேற்றுமை உருபு சேரும்போது ஏற்படும் அகச் சந்தி (internal sandhi) மாற்றங்களை விளக்கியது போல (புணரியல், உருபியல்), வினைச்சொற்கள் கால விகுதி ஏற்கும் மாற்றங்களை விளக்காததால் இப்படிப்பட்ட விளக்கங் களைக் கொடுத்துள்ளார்கள். எனவே அது மருச் சொல் அல்ல; வினைச் சொல்லின் அகப்புணர்ச்சி பற்றிய விளக்கம் என்று ஆகும்.

6. பிண்டப் பெயர்

'பிண்டப் பெயரும் ஆயியல் திரியா

பண்டியல் மருங்கின் மரீஇய பெயரே' (வேற்றுமை மயங்கியல். 7)

இது முதல், சினை பற்றிய சூத்திரங்களுக்குப் பின் அமைந்துள்ளதால் முதல்/சினை கருத்தோடு தொடர்பு உடையது.

1) 'பிண்டப்பெயர்' 2) 'ஆயியல் திரியா' என்பதன் விளக்கங்களும், 3) 'மரீஇய பெயரு'க்குப் 'பண்டியல் மருங்கு' என்ற அடை கொடுத்த காரணமும் ஆராயப்பட வேண்டியவை.

பிண்டம் 'பல பொருட் தொகுதி,... அது முதலும் சினையுமே ஆம்' என்று சேனாவரையரும், 'திரட்சியாகிய பெயர். அதுவும் திரட்சியும் திரண்ட பொருளும் பொருளால் வேறுபடா' என்று தெய்வச்சிலையாரும் விளக்கியுள்ளார்கள். எல்லோரும் குப்பை (நெற்குப்பை,) என்ற உதாரணத்தையும் இளம்பூரணர் ஒழிந்த உரையாசிரியர்கள் படை என்ற உதாரணத்தையும் கூடுதலாகக் கொடுத்துள்ளார்கள்.

'பிண்டம்' என்பது அகராதிப் பொருண்மையியல் நோக்கில் புதிய கருத்து. முதல் (Whole), சினை (part) என்பது சொற்களின் பொருண்மையோடு தொடர்பு உடையதாயினும் சிறிது மாறுபட்டது. அதாவது சொற்களின் பொருண்மை அடிப்படையில் அமையும் மீச்சொல், உட்சொற்கள் போல் இன்னொரு உறவுநிலை முதல் (மீச்சொல்), சினை (சினைப்பெயர்கள் = உட்சொற்கள். இங்குப் பிண்டம் என்ற அகராதிப் பொருண்மையியல் நோக்கில் புதிய கருத்து. பிண்டம் ஒரு பொருட் தொகுதி (Collection, heap) என்பதால், முதல், சினை என்று வேறுபடுத்த முடியாதது. எனவே முதல், சினை என்பவைகளோடு மாறுபட்ட பொருண்மை உடையது.

உரையாசிரியர்கள், பிண்டம் என்பதற்கு நெற்குப்பை, எட் குப்பை முதலிய உதாரணங்களைக் கொடுத்து, 'நெல்லின் வேறு, குப்பை என்பது ஒன்று இல்லை' என்று இளம்பூரணரும்', 'குப்பை என்புழி தொக்கப் பல பொருள் அல்லது அவற்றின் வேறாய், அவற்றான் இயன்று, தான் எனப்படும் பொருள் இன்மையின் தொல்லாசிரியர் அதனை முதல் என்று வேண்டார், அதனான் வேறு (பிண்டம்) கூறினார் என்று சேனாவரையரும் விளக்கியுள்ளார்கள்.

பிண்டம் ஒரே பொருளால் ஆனாலும், வேறுபடுத்த முடியாதது என்று அமைகிறது. ஆனால் 'ஆயியல் திரியா' என்று கூறியதால்

'சொல்லுவானது குறிப்பினால் முதல் என்றும் சினை என்றும் வழங்கப்படுவதோடு வேற்றுமை உருபு பயன்பாட்டிலும் மாறுபடுகிறது என்பது பெறப்படுகிறது. அதனால் சேனாவரையர் அதை ஒட்டி குப்பையது தலையைச் சிதறினான், குப்பையது தலைக்கண் சிதறினான், குப்பையை தலையைச் சிதறினான் என்ற சினை / முதல் பெயர்களைப் போல உதாரணங்களைக் கொடுத்துவிட்டு மேலே குறிப்பிட்டபொது விளக்கத்தைக் கொடுத்துள்ளார். அதாவது பிண்டம் என்பதில் முதல், சினை வேறுபாடு இல்லாவிட்டாலும் வழக்கத்தில், அப்படிப் பயன்படுகிறது என்று பொருள். உண்மையில் 'ஆயியல் திரியாது' என்று தொல்காப்பியம் கூறியதே உலக வழக்கை ஒட்டியது.

இந்த வழக்கு பழங்காலத்திலிருந்து இருந்து வந்துள்ளது என்பதைப் 'பண்டியல் மருங்கு' என்றும் ஆனால் 'மரீஇய மரபே' என்று கூறியதால் இயல்பான வழக்கு இல்லை, அவை மருவிய வழக்கு என்பது பெறப்படுகிறது. வரலாற்று மொழியியலில் ஒப்புமையாக்கம் (analogy) என்று குறிப்பிடப்படும். முதல், சினை என்ற வேறுபாடு இல்லாத பிண்டம் என்ற சொல்லையும் முதல், சினை என்ற வேறுபாடு இருப்பதாகக் கருதி அந்தத் தொடர்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. பொருண்மை நோக்கில் அவை தவறு என்றாலும், வழக்கில் காணப்படுவதால் இலக்கண விளக்கம் என்ற முறையில் 'மரீஇய மரபே' என்று கூறித் தொல்காப்பியம் ஏற்றுக்கொண்டு விளக்கம் கொடுத்துள்ளது எனலாம்.

தொல்காப்பியமே நூல்வகையில் 'பிண்டம்' (செய்யுள் 170) என்ற ஒரு வகை குறிப்பிட்டுள்ளது. பல தொகுதிகள் உடையது பிண்டம். தொல்காப்பியமே எழுத்து, சொல் பொருள் என்ற தொகுதி அடங்கிய ஒரு பிண்டம். அது இலக்கண நோக்கு. பேச்சு மொழியிலும் 'பிண்டம்' என்ற கருத்தமைவு இருப்பதையே சினை, முதல் என்ற கருத்தமைவை விளக்கும்போது குறிப்பிடப்பட்டுள்ளது. அதை 'மரு' என்று கொண்டது விவாதத்துக்கு உரியது.

'பண்டியல் மருங்கு' பற்றி பொழிப்புரையில் விளக்காவிட்டாலும் விளக்கவுரையில் இளம்பூரணர் 'வழங்குமாற்றால் உண்டு போலும்' என்றும்; சேனாவரையர், 'மேற்றொட்டு வழங்கிவாரா நின்ற கூற்றான் மருவிய முறை' என்றும் விளக்கியுள்ளார்கள். உண்மையில் தொல்காப்பியத்துக்கு முந்திய காலத்திலே வழங்கி வருவது என்றும், மருவாகக் கொள்ள வேண்டிய மரபு என்று அமைதி கூறுகிறார் என்று பொருள். இலக்கிய மொழியியல் நோக்கில் ஒரு தொல் வழக்கு என்று ஆகிறது.

'அதிகாரப்பட்டு நின்றது ஆகலாலும், பொருள் ஆராய்ச்சியும் இச்சொல்லாராய்ச்சிக்குப் பயன்படும் நிலைமைத்து ஆகலானும் அமையும்' என்ற நச்சினார்க்கினியர் விளக்கவுரை சொல்லின் பொருண்மையியல் கருத்துக்கு மாறுபட்டு, பழங்காலத்திலிருந்து வழங்கி வருகிற உலக வழக்கு என்பதால்; மரு வழக்கு அல்ல, மாறுபட்ட வழக்கு என்று கொள்ளவேண்டும் என்று கூறுவது சிறப்பானது. தொல் வழக்கு என்று குறிப்பிட்டு மேலே சில வழக்குகள் விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

7. அவையல் கிளவி

'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்பதன் (எச்சவியல், 46) அடுத்த சூத்திரம் 'மறைக்குங்காலை மரீஇயது ஒரால்' என்று அமைந்துள்ளதால், அவையல் கிளவியும் மருவோடு தொடர்பு உடையது தெளிவாகிறது. அதனால் 'மரபு வழுக் காத்தல்' என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் குறிப்பிட்டுள்ளார்கள். சேனாவரையர் 'வழுஅமைதி இன்மை' என்று கூறினாலும் 'அவைக்கண் உரைக்கப்படாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்து பிற வாய்பாட்டால் சொல்லுக' என்று பொழிப்புரைத்துள்ளதால் ஒரு வகை மரு என்பது புலனாகிறது.

'அவையல் கிளவி' என்பதே மொழியின் சமூகப் பண்பாடு பற்றியது. அதாவது ஒரு கருத்தை அதற்கு உரிய சொல்லால் நேரடியாகக் கூறாது மறுத்து, வேறு சொற்களால் சபையில் கூறுவது. எனவே நேரடிப் பேச்சோடு சபைப் பேச்சு (பலரும் கூடும் இடம், மேடைப் பேச்சு) என்ற பரிமாணம் இருப்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. மொழியியல் நோக்கில் அகராதி நிலையில் மரு என்று கூறலாம்.

பொதுவாக மறைத்துப் பிற வாய்பாட்டால் கூறுதல் என்று உரையாசிரியர்கள் கருதி, எழுத்து நிலை மரு உதாரணத்தையும் இங்குக் கொடுத்துள்ளார்கள்.

இளம்பூரணர் இந்தச் சூத்திரத்தை 'தகுதியும் வழக்கும்' என்ற சூத்திரத்தின் (கிளவி 17) தொடர்ச்சியாகப் பார்த்து, சூத்திர முன்னுரையில் 'தகுதியும் வழக்கும்' என்பதனுள் கூறப்படாது, ஒழிந்து நின்றதோர் மரபுவழு காத்தல் நுதலிற்று' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரே தகுதியை மூன்று வகைப்படுத்தியதில் அவையல் கிளவி, இடக்கரடக்கல் என்ற வகையைச் சாரும் என்று ஆகிறது. ஆனால் இங்கு அவர் வேறு உதாரணங்களைக் கொடுத்துள்ளார்.

'நன்மக்களுட் கூறப்படாத சொல்லைக் கிடந்தவாறே சொல்லாது, பிற வாய்பாட்டான் மறைத்துச் சொல்லுதல்' என்று இளம்பூரணர் விளக்கி 'கால்மேல் நீர் பெய்தும், வாய்பூசிவருதும் என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளார். இவை அகராதிநிலை மரு மாற்றம் என்று கொள்ளலாம்.

பிற உரையாசிரியர்கள் கூடுதல் உதாரணம், கூடுதல் வகையுடைய உதாரணங்களும் கூடுதல் விளக்கமும் கொடுத்து, தகுதி வழக்கு பற்றி விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார்கள், அது பற்றிப் பின் பகுதியில் விளக்கப்படும்.

இந்தச் சூத்திரம் எச்சங்கள் பற்றிய சூத்திரங்களை அடுத்து வந்துள்ளதால், தெய்வச்சிலையார் இது 'குறிப்பெச்சம் உணர்த்தற் பாலது' என்று கொண்டு தொல்காப்பியம், சொற்கள் பொருள் உணர்த்தும் முறையை விளக்கும் சூத்திரமான

'தெரிபு வேறு கிளத்தலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற்றென்ப பொருண்மை நிலையே'

எனப் பெயரியலுள் (3) ஓதுதலால் அதன்கண் சில சொற்களை மரபு வழு காக்க வேண்டுதலின் அவை அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்று கூறுவதால் இந்தச் சூத்திரம் அவர் நோக்கில் பொருண்மையியல் பற்றியது என்று ஆகிறது.

'மறைத்துச் சொல்லுதல்' என்றும் சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதால் 'மறைத்துச் சொல்லுதல் இரு வகைப்படும்; 1) 'மங்கல மரபினாற் கூறுதல், 2) இடக்கர் அடக்கிக் கூறுதல் என்றும் அவரே குறிப்பிட்டு, 'மங்கல மரபினாற் கூறுவது - செத்தாரைத் துஞ்சினார் என்றும் ஓலையைத் திருமுகம் என்றும் கூறுதல். அவை அவைக் களத்துப் பட்டாங்கு கூறிற் குற்றம் பயக்கும் ஆகலின் அவ்வாறு கூறினார் என்க. இடக்கர் அடக்கிக் கூறுதல் - கண்கழீஇ வருதும், கால்மேல் நீர் பெய்தும் எனப் பிற வாய்பாட்டான் வரும் பொருண்மையை மறைத்துச் சொல்லுதல்' என்று விளக்கியுள்ளார்.

இங்கு மங்கல மரபு சமூக உளவியல் உணர்வு, இடக்கரடக்கல் சமூக மொழிப் பண்பாட்டு உணர்வு 'பிற வாய்பாட்டான் வரும் பொருண்மையை மறைத்துச் சொல்லுதல்' என்பது மருவால் அகராதி மாற்றம் நடைபெறுகிறது என்பதை நேரடியாகக் குறிப்பிட்டுள்ளது தெளிவு. அடுத்து 'இவை ('மங்கல மரபினாற் கூறுதல், இடக்கர் அடக்கிக்

கூறுதல்'), அவைக் களத்துப் பட்டாங்கு கூறிற் குற்றம் பயக்கும்' என்பது தவறான மொழிப் பயன்பாட்டுக்குத் தண்டனை என்பது போல் உள்ளது.

உண்மையில் இந்தக் கருத்து 'தகுதியும் வழக்கும்' (கிளவியாக்கம் 17) என்ற சூத்திரத்தால் பெறப்படுவது. இந்த இரண்டு வகையும் இளம்பூரணர் கிளவியாக்கத்தில் கூறிய தகுதியின் மூன்று உள்வகைகளில் இரண்டு வகையில் அடங்கும். தெய்வச்சிலையார் இங்கும் அதற்கு முன்னுள்ள சூத்திரங்களின் அடிப்படையில் வேறு பொருள் கொண்டுள்ளார்.

சூத்திர உரைமுன்னுரையிலும் 'குறிப்பெச்சம் உணர்த்துதல் என்று தெய்வச்சிலையார் கூறியதற்கு ஏற்ப இறுதியிலும் 'இவை வேறு ஒன்றைக் குறித்துக் கூறுதலின் குறிப்பெச்சம்' என்ற அவர் கருத்து விவாதத்துக்கு உரியது. அவரே 'பிற வாய்பாட்டான் வரும் பொருண்மையை மறைத்துச் சொல்லுதல்' என்று விளக்கியதைக் குறிப்பெச்சம் என்று கொள்ளமுடியாது.

உண்மையில் குறிப்பெச்சம் என்பது கூடுதல் கருத்து பெறப்படுவது. மங்கல மரபு, இடக்கர் அடக்கல் என்பவை மாற்றாக வேறு சொல் அதாவது பேசிய கருத்து மட்டுமே அதற்கே உரிய வேறு சொல்லால் பெறப்படுவது என்பதால் 'குறிப்பெச்சம்' ஆகாது.

நச்சினார்க்கினியர் கூறிய 'வழு அமைதி' என்ற கருத்து பொருத்தமாக இருக்கும். இங்கு நச்சினார்க்கினியரின் 'தகுதி', தெய்வச்சிலையாரின் மங்கல மரபு ஆகும். உண்மையில் 'தகுதி' தொல்காப்பிய வழக்கு, பொதுநிலை; 'மங்கல மரபு' பிற்கால வழக்கு (நன்னூல்) குறிப்பிட்ட அல்லது சிறப்புநிலை.

ஆனால் சேனாவரையர் விளக்கவுரையில் 'இது வழுவமைதி இன்மையான் கிளவியாக்கத்துக் கூறார் ஆயினார்' என்று குறிப்பிடுவதால் கருத்து நிலையில் மேலே கூறிய கருத்துகளை ஒத்துக்கொள்ளவில்லை என்று ஆகிறது.

இந்தச் சூத்திரக் கருத்து 'தகுதியும் வழக்குந்' (கிளவியாக்கம் 17) என்ற சூத்திரத் 'தகுதி'க் கருத்தோடு தொடர்பு பற்றிய சிந்தனை சேனாவரையருக்குத் தோன்றி அவை தகுதி வழக்கு அல்ல என்று விளக்குகிறார்.

1. 'இவை ('கால்மேல் நீர் பெய்தும், ஆப்பி) 'தகுதியும் வழக்குந்' என்புழித் தகுதியாய் அடங்கும் எனின் 2. செத்தாரைத் துஞ்சினார் என்றல் முதலாயின அன்றே தகுதி ஆவன, 3) 'செத்தார் என்பது இலக்கணம்

ஆகலின், அதனானும் வழங்கப்படும். தகவு நோக்கிச் சொல்லுங்கால் 'துஞ்சினார்' என்றும் சொல்லப்படும். 4) ஈண்டை 'அவையல் கிளவி'யாற் கிளத்தல் வழுவதாலின் மறைந்த வாய்பாட்டானே கிளக்கப்படும். அதனான் ஆண்டு அடங்காது' என்பது சேனாவரையர் விளக்கம். (விவாதத்தில் குறிப்பிடுவதற்கு எண் கொடுக்கப்பட்டுள்ளது). முதல் கருத்து அவர் குறிப்பிட்டுள்ள இன்னொரு சூத்திரத்தின் கருத்தை ஒட்டிய பிறர் கருத்து. 2) அதில் இடக்கரடக்கல் வகையைச் சார்ந்த செத்தாரைத் துஞ்சினார் என்பது ஒரு வகையில் தகுதியில் அடங்கும். 3) அவை எப்போதும் அப்படியே உரைக்கப்படுவது இல்லை என்பது சேனாவரையர் விளக்கம். 4) அதனால் அவை அவையல் கிளவியே தவிரத் 'தகுதி' இல்லை என்பது அவர் கருத்து.

'தகுதியாவது 'செத்தான்' எனப் பெரும்பான்மையாக வழங்கப்பட்டன தகுதி நோக்கித் 'துஞ்சினான்' எனச் சிறுபான்மை வழங்கப்பட்டு நிற்கும்; அவையல் கிளவியாவது இழிந்தோர் கூறும் இழி சொற்களை நன்மக்களிடை மறைத்துக் கூறப்படும். இஃது இரண்டற்கும் வேற்றுமை. இங்ஙனம் மறைத்துக் கூறாக்கால் வழுவாதல் கருதி வழு அமைத்தார்' என்ற நச்சினார்க்கினியர் விளக்கம் பயன்பாட்டு நோக்கில் சேனாவரையர் கருத்தை ஒத்துக்கொண்டு இரண்டையும் சமூக உயர்வு / தாழ்வு ஒட்டிய வழக்கு என்று வேறுபடுத்தியுள்ளார்.

இதைத் 'தகுதி'யின் கூறாகக் கொள்வது மற்றொரு வகை பொதுமைப்படுத்தல் ஆகும்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூடுதல் உதாரணமாக 'ஆன்முன் வருஉம் ஈகாரம்' (உயிர்மயங்கியல், 31=ஆன்+பீ > ஆப்பி) என்று கொடுத்துள்ளார்கள். இங்கு அவையல் கிளவி பீ (அதைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஈகார பகரம் என்றே குறிப்பிட்டுள்ளார்கள்) நேரடியாக எழுத்து மாற்றத்தோடு கூறப்படுகிறது. இந்த மாறுபாட்டை உணர்ந்த சேனாவரையர் 'ஈகார பகரம் என்பது போலக் கண் கழுவுதல் முதலாயின அவையல் கிளவியைக் கிடந்தவாறு கூறாது, பிறிதோர் ஆற்றாற் கிளந்தன அல்ல எனினும்; அவையல் கிளவிப் பொருண்மையை உணர்த்தலின், அவையல் கிளவியைப் பிறிதோர் ஆற்றாற் கூறிய வகைப்பாடாகக் கொள்ளப்படும்' என்று விளக்கியுள்ளது அவையல் கிளவியில் கண் கழுவுதல் முதலாயின பிறிதோர் சொல்லால் சொல்லுவதும் ஒருவகை என்றாகிறது. ஆன் + பீ > ஆப்பி என்பது நேரடியாக எழுத்து மாற்றத்தோடு கூறுவது இன்னொரு வகை அமைந்திருப்பது உணர்ந்ததைப் புலப்படுத்துகிறது.

இந்த மாறுபாட்டை நச்சினார்க்கினியரும் 'ஈகார பகரம் என்று அவையல் கிளவியைக் குறிப்பிட்டு எழுத்து மாற்றத்தை விளக்குவது, கண் கழீஇ வருதல் முதலாயின பிற சொல்லால் உணர்த்துவது' என்று குறிப்பிட்டுள்ளதில் எழுத்து மாற்றம், அகராதி மாற்றம் '(பிற சொல்லால் உணர்த்துவது) இரண்டு வகை மொழி அமைப்பு நோக்கில் இருப்பது தெளிவுபடுகிறது.

இன்னொரு அவையல் கிளவியாக சிறுநீர் (மூத்திரம்) என்பதைச் சேனாவரையர் குறிப்பிட்டுள்ளார்.

'களிறு நின்றிறந்த நீரல் ஈரத்து (நற்றிணை.103.4, நீரல் ஈரம் = சிறுநீர்), 'கருமுக மந்தி செம்பின் ஏற்றை' (கருமுகம் = மந்தியின் குறியிடம்) என்று உதாரணத்தைச் சேனாவரையர் கொடுத்து 'வாய்பாடு மறைத்து பிறிதொரு வாய்பாட்டால் கூறியவாறு' என்று விளக்குவதால் அவையல் கிளவி அகராதி நிலையில் மாற்றுச் சொற்கள் என்று ஆகி அது இலக்கிய வழக்கிலும் அமைகிறது என்று கொள்ளலாம்.

நச்சினார்க்கினியரும் இந்த உதாரணங்களை ஏற்றுக்கொண்டு அகராதி மாற்றம் என்பதைப் 'பிற சொற்களால் உணர்த்திற்றேனும் அப்பொருளையே உணர்த்தி நிற்றல்' என்று தன்னுடைய சொற்களால் குறிப்பிட்டுள்ளார். எனவே அவையல் கிளவியில் எழுத்து நிலை மரு, சொல் (அகராதி) நிலை என்று இரண்டு வகை அமைவது உணரத்தகுந்தது.

8. மரீஇயது

'மறைக்குங் காலை மரீஇய(து) ஒராஅல்' (எச்சம்.47) என்பது 'அவையல் கிளவி' என்பதன் அடுத்த சூத்திரம் என்பதால் 'அவையல் கிளவி'யை மறைப்பது 'மரீயஇது' என்று இங்கு விளக்கிவிட்டு, அதை நீக்காதே என்று கூறுவதன் காரணம் சிந்திக்கத் தகுந்தது. பேச்சு மொழியில் வழங்கி வருவதைச் செய்யுள் மொழியிலும் பயன்படுத்தலாம் என்பதை எதிர்மறையில் 'ஒராஅல்' என்று கூறப்பட்டுள்ளதோ என்று தோன்றுகிறது.

எல்லா உரையாசிரியர்களும் ஆப்பி வடிவத்தைக் கொடுத்ததோடு கூடுதலாக ஒவ்வொருவரும் கூடுதல் உதாரணத்தைக் கொடுத்துள்ளார்கள்.

'ஆப்பி, ஆணையிலண்டம் என மரீஇ வந்தன, மறைக்கப்படாது வந்தவாறு' என்று சேனாவரையர் விளக்கமும் கொடுத்துள்ளார்.

மேலும் அவர் இலக்கிய உதாரணங்களைக் கொடுத்துள்ளதும் பொது கருத்தாடலிலும் மருச் சொற்கள் கையாளலாம் என்பது உறுதியாகிறது.

'அகலிரு விசும்பில் பாயிருள் பருகி
பகல் கான்று எழுதரு பல்கதிர் பரிதி'

(பெரும்பாணாற்றுப்படை, 1-2)

என்பது தன் பொருளின் நில்லாது அணி குறித்துப் பிறிதோர் பொருள் மேல் நிற்றலின் மரீஇய சொல்லாய் மறைக்கப்படாமையும், அதன் பொருள் நின்றவழி மறைக்கப்படுதலும் அறிக' என்பது சேனாவரையர் உதாரணமும் விளக்கமும். (இங்கு அவர் 2ஆம் அடியை மட்டும் கொடுத்திருந்தாலும் விளக்கத்துக்காக முதல் அடியும் கொடுக்கப்பட்டுள்ளது).

நச்சினார்க்கினியரும் 'தன் பொருள்மேல் நில்லாது அணி குறித்து நின்றது' என்று இந்த உதாரணத்தைத் தந்து 'தம் பொருளை உணர்த்துங்கால் மறைத்துக் கூறப்படுமாறு உணர்க' என்று குறிப்பிட்டுள்ளார்.

இங்குப் பருகு (குடித்தல்), கான்று (கக்குதல்), திருகு (முறுகு) என்ற வினைச் சொற்களே மரு வழக்குகளாகக் கருதப்படுகின்றன. அவை சூரியனின் செயல்கள். எனவே உண்மையில் அவை மனிதனின் செயல்சொற்களால் விளக்கப்பட்டுள்ளன. எனவே மரு வழக்காகக் கருதுவது பொருந்தாது.

தொல்காப்பியம் செய்யுளியலில் (138) 'ஞாயிறு, திங்கள்..../சொல்லுந போலவும் கேட்குந போலவும் / சொல்லியாங்கு அமையும்' என்று கூறியது மனித செயல்களை ஏற்றிக் கூறுவது செய்யுளில் வழக்கம் என்ற கருத்து பெறப்படுகிறது. இதை மேலைநாட்டார் மானிடவாக்கம் (personification) என்ற இலக்கிய உத்தி என்று குறிப்பிடுவார்கள்.

உரையாசிரியர் அணி என்று பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதைச் சிவலிங்கனார் (1988:315 அகு) சமாதி அணி என்று அடையாளப்படுத்தியுள்ளார். 'ஒரு பொருளுக்கு உரிய இயல்பினை மற்றொரு பொருளின் மேல் ஏற்றி அதற்குப் பொருந்த வினைச் சொற்களைப் புணர்த்தல்' என்று சமாதி அணி கோபாலையர் (2005 பொருள் அணி 1 ப.260) விளக்கி, அதில் இந்த அடிகளையே கொடுத்து

'ஆகாயத்தில் பரவியுள்ள இருளை விழுங்கிப் பகலைக் கக்கிக்கொண்டு உதித்தெழும் பல கதிர்களைக் கொண்ட சூரியன் என்று பொருள்படும். இவ்வடிகளில் இருளை அகற்றுவதும் பகலை வெளிப்படுத்துவதும் ஆகிய செயல்களை மனிதர்களின் விழுங்குதல், கக்குதல் என்னும் செயல்கள் ஆக்கி உணர்த்தினமையின் இது குண அணியாம்' என்று கோபாலையர் விளக்கியுள்ளார். எனவே சமாதி அணி என்பது மானிடவாக்க உத்தி என்பது தெளிவு. எப்படியானாலும் பருகுதல், கான்றுதல் முதலிய சொற்களை மருவாகக் கருத முடியாது என்பதால் இந்த உதாரணம் இங்குப் பொருந்தாது. 'மெழுகும் ஆப்பி கண் கலுழ் நீரானே' என்ற புறநானூற்று அடியை (249.14) நச்சினார்க்கினியர் கூடுதல் உதாரணமாகக் கொடுத்துள்ளார். இங்கு ஆப்பி என்ற மருச்சொல் நேரடியாக இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

9. தகுதியும் வழக்கும்

'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே' *(கிளவியாக்கம் 17)*

என்பதை மருவோடு தொடர்பு உடையதாகத் தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் கொண்டாலும், விளக்கத்தில் மாறுபடுகிறார்கள். தெய்வச்சிலையார் அப்படிக் கொள்வதற்குக் காரணம் முன்னுள்ள 13 முதல் 16 வரை சூத்திரங்கள் செப்பு, வினா வாக்கியங்கள் கருத்தாடல் நோக்கிலும் விளக்குவதுதான். எனவே தகுதி, வழக்கு என்ற இரண்டு கருத்தாடல் நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்றன என்று ஆகிறது.

மேலும் தகுதி, வழக்கு என்பவை இலக்கணக் கலைச்சொற்களாய் அமையாமல் பொதுச் சொற்களாய் அமைந்து, கருத்து மாறுபாட்டுக்கு இடம் கொடுத்துவிட்டது. செய்யுள் /வழக்கு ('வழக்காறல்ல செய்யுளாறே' கிளவியாக்கம் 18) என்ற முறையிலும் 'நாடக வழக்கு / உலகியல் வழக்கு/ பாடல் சான்ற புலனெறி வழக்கு (அகத்திணையியல் 53) என்ற முறையிலும் தொல்காப்பியத்தில் அமைந்துள்ளது.

இளம்பூரணர் வழு அமைதியாய்க் கொண்டு அவைகளை உள்வகைப்படுத்தி விளக்குவது மேலே மரு பற்றிய கருத்தை உள்ளடக்குவதாக அமைவதோடு, மொழியின் சமூகப் பயன்பாடு பற்றிய சில கருத்துக்களை விளக்குவதாய் அமைந்துள்ளது. தொல்காப்பியம் தனியே கொடுத்த வகைகளையும் தகுதி என்பது பொதுச் சொல்லாய் இருப்பதால், இதன் கீழ் இணைத்துள்ளார் எனலாம். உண்மையில் இதுவே நன்னூலுக்கு வழி காட்டி.

கல்லாடர் உரை இளம்பூரணரைத் தழுவியது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் வகைப்படுத்தாமல் இளம்பூரணர் கொடுத்த ஒரு வகைக்குரிய (மங்கலம்) உதாரணங்களைத் 'தகுதி'யாகக் கொண்டுள்ளார்கள்.

'தகுதி என்பது அப்பொருட்கு உரிய சொல்லால் சொல்லுதல் நீர்மை அன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பட்டால் கூறுவது' என்பது சேனாவரையர் விளக்கம். அதே கருத்தை வேறு சொற்களால் நச்சினார்க்கினியர் 'ஒரு பொருட்கு உரிய சொல்லால் பட்டாங்கே சொல்லுதல் நீர்மை அன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பட்டால் கூறுதல்' என்று கூறியுள்ளார்.

'பகுதிக்கிளவி வரைநிலை இலவே' என்ற அடுத்த அடி மரு வழக்கு சார்ந்தது என்பதையும், அவையும் வழக்கில் பயன்படுத்துவதற்குத் தடை இல்லை என்பதையும் புலப்படுத்துகிறது.

'பகுதிக்கிளவி' என்பது 'பக்கச்சொல்' என்று தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்களும் 'கூற்றுச்சொல்' என்று தெய்வச்சிலையாரும் பொருள் எழுதியுள்ளார்கள். அதன் பொருள், மாற்றுச்சொல் என்பதே. அது புது வழக்கே. தொல்காப்பியம் தொடை எதுகைக்காகப் படைத்துக் கொண்ட தொடர் என்றே கருதத் தோன்றுகிறது.

9.1. தகுதி

'தகுதி' என்பது ஒரு நிலையில் பொதுச்சொல். 'தகுதி' பொருத்தம் என்ற பொருளில் பொருளதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (பாலசுப்பிரமணியன் 2016:216). அங்கு இடக்கரடக்கல் போன்ற காரணங்கள் என்பதை ஒரு பொருளுக்கு உரிய நேர்ச்சொல்லைவிட, இன்னொரு சொல் பொருத்தமானது என்று கருதி, மொழி பேசுவோர் பயன்படுத்துவது என்று விளக்கலாம். அதாவது ஒரு காரணத்தால் பொருத்தம் என்று கட்டுப்பாடு அமைவதால் கலைச்சொல்லாக உரிமை பெற்று, வேறு சில வகைகளையும் உள்ளடக்குவதாகக் கொண்டுள்ளது என்று இளம்பூரணர் கருத்தை நியாயப்படுத்தலாம்.

9.1.1. இளம்பூரணரின் உள் வகைகள்

'தகுதி என்பது மூன்று வகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழுவின் வந்த குறிநிலை வழக்கும் என'.

தொடர்ச்சி அடுத்த இதழில்

பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி: 9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. *(1090)*

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. *(1201)*

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு. *(1281)*

(சீசன் லீலர் என்பாரும் தமது நூலில் காதலின்பத்தைக் கள்ளின்பத்திற்கு ஒப்பிடக் காணலாம்.)

IV

திருக்குறள் காமத்துப்பாலிலும் ஸ்தாந்தலின் காதல் பற்றிய நூலிலும் (On Love) பிரான்சுவா குரோ சுட்டிக் காட்டும் அளவிற்கும் மேலான ஒற்றுமைக் கூறுகள் இருக்கக் காணலாம். காமத்துப்பாலின் அதிகாரங்கள் தகையணங்குறுத்தல் (தலைவியின் இளமையையும் அழகையும் கண்டு தலைவன் அச்சமும் வியப்பும் அடைதல்), குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்பு உரைத்தல், நாணுத்துறவு உரைத்தல் (காதல் மிகும்போது நாணத்தைத் துறத்தல்), அலர் அறிவுறுத்தல், பிரிவாற்றாமை, படர் மெலிந்து இரங்கல் (கணவனைப் பிரிந்த மனைவியின் துயரம்), கண் விதுப்பழிதல் (பிரிந்து சென்ற கணவனைக்காண மனைவியின் விழைவு), பசப்புறுபருவரல் (தலைவனைப் பிரிந்த தலைவியின் நிறம் மாறுபடல்), தனிப்படர் மிகுதி (தலைவனைப் பிரிந்த தலைவி) தன்னையே நொந்து கொள்ளுதல்), நினைந்தவர் புலம்பல் (பிரிந்த தலைவனும் தலைவியும் பழைய

நினைவுகளால் வருந்தல்), கனவு நிலை உரைத்தல் (தான் கண்ட கனவுகளை நினைத்துப் பேசுதல்), பொழுது கண்டு இரங்கல் (மாலைப் பொழுதைப் பிரிவு காரணமாகச் சாடுதல்), உறுப்பு நலனழிதல் (முகமும், கண்களும், தோளும் அவற்றின் அழகை இழத்தல்), நெஞ்சொடு கிளத்தல் (தலைவி தன் நெஞ்சையே நொந்து கொள்ளுதல்), நிறையழிதல் (காமம் தலைவியின் நிறையை அழித்தல்), அவர்வயின் விதும்பல் (தலைவி தன் பிரிவுத்துயரைத் தோழியிடம் கூறி வருந்தல்), குறிப்பறிவுறுத்தல் (தலைவியும் தலைவனும் தங்கள் எண்ணங்களைக் குறிப்பால் உணர்த்தல்), புணர்ச்சி விதும்பல் (தலைவி தனது புணர்ச்சி விழைவைத் தெரிவித்தல்), நெஞ்சொடு புலத்தல் (தலைவி தன் நெஞ்சைக் குற்றம் சாட்டுதல்), புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை (ஊடலால் பெறும் இன்பம்) போன்ற தலைப்புகளில் தலைவன், தலைவி ஆகிய இருவரின் எண்ணங்களையும், உணர்வுகளையும் நாடகக் காட்சிகளாகப் புலப்படுத்தும்.

ஆண்-பெண் காதல் பற்றிய தமது **De l' Amour** என்னும் நூலே தம்முடைய நூல்களிலெல்லாம் பெருஞ்சிறப்புக்கு உரியதென்று ஸ்தாந்தல் கருதினார். தமது வாழ்வின் மகிழ்ச்சியான நாட்களில் அது எழுதப்பட்டதாக அவரே கூறுவார்.

ஸ்தாந்தலின் பெரு நூலில் காதல் (Of Love), காதல் பிறத்தல் (Of the Birth of Love), நம்பிக்கை (Of Hope), ஆணிடமும் பெண்ணிடமும் காதல் தோன்றுவதிலுள்ள வேறுபாடுகள் (Difference between the birth of love in the two sexes), முதல் பார்வையிலேயே காதல் (Love at First Sight), காதல் எனும் தொத்து நோய் (Of Infatuation), நாணம் (Of Modesty), காதற் குறிப்பு (The Glance), பெண்ணின் தற்பெருமை (Of Feminine Pride), பெண்களின் அஞ்சாமை (Of Women's Courage), புணர்ச்சி (Of Intimate Intercourse), பாங்கனும் தோழியும் (Of Confidences), பொறாமை (Of Jealousy), தன்மானத்திற்கு ஊறு (Of Self-Esteem Piqued), பூசல் நிறைந்த காதல் (Of Quarrelsome Love), காதல் நோய்க்கு மருந்துகள் (Remedies Against Love) என்னும் தலைப்புகளில் காதல்பற்றிப் பல கருத்துக்களை இலக்கிய நயத்தோடும் நகையுணர்வோடும் ஆசிரியர் சொல்லிச் செல்கிறார். பலவரலாற்று

நிகழ்ச்சிகளும், கிரேக்கத் தொன்மங்களிலிருந்தும் மேலை ஐரோப்பிய இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள்களும் இடம்பெறுகின்றன. நூலின் இரண்டாம் பகுதியில் பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகளில் ஆசிரியர் பெற்ற காதல் அனுபவங்களையும் சந்தித்த காதலர்களையும் பற்றிச் சுருக்க மாகவும் அழகாகவும் எடுத்துரைக்கிறார். "பெண்கல்வி", "திருமணம்", "அறமென்று அழைக்கப் பெறுவது" போன்ற தலைப்புகளிலும் தனி அதிகாரங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

திருவள்ளுவருடைய கருத்துக்களையெல்லாம் அப்படியே ஸ்தாந்தல் ஏற்றுக் கொண்டாரென்றோ, அவற்றுள் பலவற்றை எதிரொலிக்கிறாரென்றோ சொல்ல முடியாது. ஆனால் அவர் கொடுத்துள்ள தலைப்புகளுக்கெல்லாம் திருவள்ளுவரின் அதிகாரத் தலைப்புகள் முன் மாதிரிகளாகவும் தூண்டுகோல்களாகவும் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது.

ஸ்தாந்தல் காதல் பற்றியும், காதலர் பற்றியும், காமுகர் பற்றியும், பரத்தையர் பற்றியும் எடுத்துரைப்பவனவற்றுள் குறள்களுக்கு எதிரொலியாய்த் தோன்றுவன கீழே தரப்படுகின்றன: இச்சிறு நூல் ஒரு நாவலோ, நாவலைப் போன்று பொழுது போக்கத் துணைசெய்யும் நூலோ அன்று. பிரான்சில் காணப்படாத ஒரு விதமான பைத்திய நிலை பற்றிய அறிவியல் சித்திரிப்பு ஆகும். அது முற்றும் அகப்பொருண்மை பற்றியே பேசுவது. (ப.2)

காதல் என்னும் தீவிர உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனை ஒரு நோயாகக் கருதியே பேச வேண்டும். இவ்வாறு பேசுவதே சில சமயங்களில் அந்நோய்க்கு மருந்தாகவும் அமையலாம். (ப.14)

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. *(1102)*

காதல் என்னும் நோயின் படிநிலைகளைப் பற்றிய முற்றும் உண்மையான இவ்வருணனையை சில அறிஞர்கள் ஏற்றுக் கொள்வார்கள். (ப.15)

காதலில் நான்கு வகைகள் உண்டு. அவையாவன: (1) Passion - Love (உணர்ச்சிக்காதல்) (2) Gallant Love (அஞ்சாமை நிறைந்த பண்பட்ட

காதல்) (3) Physical Love (உடல் உறவுக் காதல்) (4) vanity Love (தற்பெருமைக் காதல் - தற்பெருமை கருதி ஓர் ஆடம்பர நடத்தை கொண்ட பெருங்குடிப் பெண்ணுடன் கொள்ளும் நட்பு) (ப.19)

காதலின் பிறப்பும் படிநிலைகளும்:

1) காதலியைக் கண்டு வியத்தலும் போற்றுதலும்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என்நெஞ்சு *(1081)*

2) உள்ளிருந்து ஒரு குரல் சொல்கிறது: காதலியை முத்தமிடுதலும், காதலியிடம் முத்தம் பெறுதலும் எத்தகைய பேரின்பம்!

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. *(1103)*

3) நம்பிக்கை: சில குறிப்புகளால் பெண்ணிற்கு ஏற்படும் காதல் உணர்வு வெளிப்படுகிறது. In the case even of the most reserved women, their eyes redden at the moment when hope is conceived: the passion is so strong, the pleasure so keen, that it betrays itself by striking signs.

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். *(1095)*

4) காதல் பிறக்கிறது. ஐம்புல இன்பங்களைத் துய்க்கும் ஆவல். (To Love - that is to have pleasure in seeing, touching, feeling, through all the senses and as near as possible; an object to be loved and that loves us)

கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள. *(1101)*

5) காதல் உணர்வு வடிவங்கொள்ளலும் உறுதிப்படலும், (ஸ்தாந்தல்) இந்நிலையைத் தெளிவுபடுத்த 'Crystallisation' என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் தொடர்ந்து கையாள்வார்.)

காதலன் தனது காதலை ஏற்றுக்கொண்டவளிடம் ஆயிரம் சிறப்புகளைக் காண்கிறான்; மனநிறைவுபெற்றுத் தனது பேருவகையை எடுத்துரைக்கிறான்; விண்ணிலிருந்து தான் பெற்ற பெரும்பேறென்று பெரிதுபடுத்திக் கொள்கிறான்; காதலியிடம் புதுப்புது நிறைகளைக் கற்பனை செய்து வியக்கின்றான். (பக்.22-23)

ஒவ்வொரு கணமும் அவனிடத்தில் மூன்று எண்ணங்கள் மாறிமாறித் தோன்றுகின்றன: 1) அவளிடம் எல்லாச் சிறப்புகளும் இருக்கின்றன. 2) அவள் என்னைக் காதலிக்கிறாள். 3) அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதை உறுதிப்படுத்தும் தலைசிறந்த சான்றாதாரத்தை எவ்வாறு பெறுவது?

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். (1105)

காதல் உறுதிப்பட்டபின் ஐயம் அதனைத் தொடர்வது இயல்பு. (ப.25)

அவள் கொண்ட காதலை அவளுடைய கண்களால் அறிந்து கொள்ளலாம்; காதலியிடம் வெகுநாட்களாக நட்புடைய ஒருவர் மூலமாகவும் இதனை அறிந்து கொள்ள வாய்ப்புண்டு.

கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதுஒன்று உண்டு. (1271)

காதல் என்பது ஒரு பித்து நிலை யென்றாலும் அதுவே இம்மண்ணுலகில் மனித இனத்திற்குப் பேரின்பம் அளிப்பதாகும். (ப.27)

காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். (1252)

உறுதியாக நிறுவப்பட்டவற்றிலும் காதலானது ஐயங்களை விளைவிக்கும். காதலனிடம் தன்னை ஒப்படைத்தவள் அவன் தனிச்சிறப்புடையவன் என்பதை உறுதியாக நம்பியவள்; அவனுக்கு எதனையும் மறுக்கத் துணியாதவள். ஆனால் அதே சமயத்தில் அவன் வேறொரு பெண்ணிடமும் நட்பு வைத்துள்ளானோ என்ற அச்சம் அவளிடம் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். (ப.33)

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. (1313)

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று. *(1314)*

நேற்று ஓர் அரசியாக இருந்தவள், இன்று (ஒருவனிடம் காதல் கொண்டபின்) தன்னை அடிமையாகப் பார்க்கிறாள். (ப.33)

பெண்கள் பகுத்தறிவினும் உணர்வையே பெரிதும் மதிக்கிறார்கள். (ப.34)

காதல் வயப்பட்ட ஆண் தன் மனத்தால் மறைவாகத் துன்புறுத்தப் படலாம். காதலில் விழுந்த பெண்கள் அலருக்கு அஞ்சுகிறார்கள். அவர்களுக்கு ஊரார் எண்ணம் முக்கியமானதாகும்.

(In Love, men run the risk of the secret torture of the soul-women expose themselves to the scoffs of the public; they are more timid, and, besides, for them public opinion means much more) (p.37)

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்

நீராக நீளும்இந் நோய். *(1147)*

அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்றார்

பலர்நாண நீத்தக் கடை. *(1149)*

காதலன் காதலியின் கண்களைப் பார்த்து, அவள் காதலைப் புரிந்து கொள்கிறான்; அவளது புன்முறுவல் அவனுக்குக் கழி பேருவகையைத் தருகிறது; அதை அவன் தொடர்ந்து எதிர்பார்க்கிறான். (ப.37)

இயற்கையிலும், கலைப்படைப்புகளிலும் அழகானவையெல்லாம் மின்னல் வேகத்தில் காதலர்க்குக் காதலியரின் நினைவைக் கொண்டு வருகின்றன. (ப.49)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்

பலர்காணும் பூவொக்கும் என்று. *(1112)*

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்

வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு *(1113)*

காதல் உயர்ந்த பண்பாட்டின் விளைவாகும். பண்பாடற்ற இனங்களிடையே உடலுறவு விழைவையே காணமுடியும். (ப.81)

உண்மையான காதல் உள்ளத்தை நிரப்புகிறது; இன்பமூட்டும் கற்பனைகளையும், துன்புறுத்தும் கற்பனைகளையும் தூண்டுகிறது.

உலகில் காணும் பிற யாவற்றையும் அது முற்றுமாகப் புறக்கணிக்கிறது. (ப.100)

துன்பம் நிறைந்த நேரங்களிலும்கூட, காதலியைச் சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி, அவனுக்கு எப்போதும் கள்ளருந்திய களிப்பை யொத்திருந்தது. (ப.109)

இனிய காதல் வாழ்வில் எப்போதும் ஒரு சிறிது ஐயம் இருந்து கொண்டே இருக்கும். அதுவே காதற்பசியை அதிகப்படுத்துவது. (ப.118)

பெண்கள் ஐயவுணர்வு கொண்டவர்கள். காதல்தோல்வியில் பெண்ணின் இழப்பே மிகுதி. பெண்ணே காதலுக்காக எதையும் தியாகம் செய்யத் துணிந்தவள். அவளுக்குக் காதல்வயப்பட்ட பொழுது காதலைத் தவிர வேறு எண்ணங்கள் இருப்பதில்லை. காதலனுடைய நடவடிக்கை களைக் கண்காணிக்க இயலாதவளாதலால் ஐயத்தாலும், அச்சத்தாலும், பொறாமையாலும் ஆணைவிட மிகுதியாகத் தாக்கப்படுகிறாள். (ப.132)

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம்உடைய
நெஞ்சம் துணை அல் வழி. *(1299)*

காதல் மட்டுமே தனது செலவுக்கான நாணயத்தைத் தானே
தயாரித்துக் கொள்ளும் உணர்வாகும். *(ப.321)*

உண்மையான காதலன் தன் காதலியின் உருவக்காட்சி
யோடு எப்போதும் இடையீடின்றி ஒன்றித்துப் போகிறான். (ப.337)

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழிமதி *(1118)*

வள்ளுவரின் "காமத்துப்பால்", ஸ்தாந்தலின் "காதல் பற்றி" என்னும் தலைப்பைக் கொண்ட நூலுக்கு அமைந்த தூண்டுகோல்கள் பலவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால் இரண்டுக்குமுள்ள வேறுபாடுகள் பல. காதலுணர்வு நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபடும் கூறுகளில் வள்ளுவரோ, தமிழ் அக இலக்கிய மரபோ அக்கறை காட்டுவதில்லை. அது மனித இனம் முற்றுக்கும் பொதுவான

உணர்வு என்ற முறையிலேயே தமிழ்ச் சான்றோர் அக இலக்கியங்களில் "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்ற அரிய மரபைப் பின்பற்றினர். ஸ்தாந்தல் தமது நூலில் காதல் உணர்வின் பொதுக் கூறினைவிட அது இத்தாலியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், ஜெர்மானியர்கள், அமெரிக்கர்கள் போன்ற நாட்டு மக்களிடையே வேறுபடும் கூறுகளில் கவனம் செலுத்துகிறார். காமசூத்திரம் பற்றியும் பிற வடமொழிக் காம நூல்கள் பற்றியும் அவர் அறிந்திருப்பாராயினும் அவற்றைப்போல் ஆண் -பெண் உடலுறவுக் காட்சிகளை முன்னிறுத்தாமல், வள்ளுவரைப் போல் நுட்பமான மனவுணர்வுகளில் அவர் ஈடுபாடு காட்டுவது நமக்குப் பெருவியப்பு அளிப்பதாகும்.

துணைநூல்கள்:

Francois Gros, **Deep Rivers**, translated by M.P.Boseman, The French Institute of Pondicherry, 2009.

Stendhal, **On Love**, translated from French by philip Sidney Woolf and Cecil N.

தென்னர்பல ரொருதமிழை மூன்றுமுறை
வளர்த்துமது சிதைந்த தென்னா
முன்னருறு மறிஞரெலா மெழுதியகா
தையிற்கேட்டே முகவை வாழ்ந்த
மன்னர்புகழ் தருபாண்டி மகிபாநீ
யேயதனை வையத் தென்றும்
நன்னர்நிலைத் திடநட்டாய் பிரிந்தாயின்
றிரண்டுநின்பால் நாங்கண் டோமே.

சங்கச் செய்திகள்

02.12.2018 அன்று நான்காம் தமிழ்ச் சங்க நிறுவனரான வள்ளல் பொன் பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நினைவு நாளினை முன்னிட்டு தமிழ்ச்சங்கச் சாலையில் அமைந்திருக்கும் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாலை 5 மணியளவில் மணியம்மை மழலையர் பள்ளியில் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் எழுதிய திருக்குறள் களஞ்சியம், நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடான யாப்பருங்கலக்காரிகை ஆகிய நூல்களை வெளியிட்டு, அறிமுக விழா நடைபெற்றது. மணியம்மை பள்ளித் தாளாளர் திரு பி.வரதராசன் அவர்கள் தலைமை வகித்தார். நான்காம் தமிழ்ச்சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்பமை நீதியரசர் அரங்க.மகாதேவன் அவர்கள் நூல்களை வெளியிட்டு மகிழ்வுரை ஆற்றினார். மூதறிஞர் இரா.இளங்குமரனார் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.

27.12.2018 அன்று மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் தமது உரையில் "சமூகப் பணியோடு தமிழ்ப்பணியினையும் சமயப் பணியினையும் ஒருங்கே ஆற்றிய தமிழ்க்காவலர். குலச் சிறப்பும், குடிச்சிறப்பும் கொண்ட சேதுபதிகள் குடும்பத்தில் தோன்றிய நந்தாவிளக்கு. சேதுபதி மன்னர்களில் முதன் முதல் ஆங்கிலக் கல்வி கற்றவர் இவரே. சமய இலக்கியங்கள் மட்டுமின்றி ஓவியத்துறையிலும், இசைத் துறையிலும் தேர்ச்சி பெற்றவர். வேதாந்தத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சுவாமி விவேகானந்தரை 1894இல் சிகாகோவில் நடைபெற்ற சமய மாநாட்டிற்குத் தான் செல்வதற்கு வந்த அழைப்பினை அவருக்குக் கொடுத்து தம் சொந்தப் பொருட்செலவில் அனுப்பி வைத்தவர். அவருடைய நன்முயற்சியாலும் பொருட்கொடையாலும் பாண்டித்துரைத்தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவியுள்ளார். மன்னர் பாஸ்கர சேதுபதியின் சிறப்பினைப் பாராட்டி மத்திய அரசு 2004இல் இவரின் உருவம் பொறித்த தபால்தலையினை வெளியிட்டுச் சிறப்புச் செய்துள்ளது" என்று குறிப்பிட்டார். முன்னதாக மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(பிப்.1)

நா.வானமாமலை
(பிப்.2)

மு.இராகவையங்கார்
(பிப்.2)

எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை
(பிப்.3)

வீரமாமுனிவர்
(பிப்.4)

ஜி.யு.போப்
(பிப்.12)

செய்குதம்பிப் பாவலர்
(பிப்.13)

ச.வையாபுரிப்பிள்ளை
(பிப்.17)

ஜி.நாகராஜன்
(பிப்.19)

வை.மு.கோதைநாயகி
அம்மாள்
(பிப்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்னம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1